1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

77-ம் புத்தகம் 40-ம் இல. யாழ்ப்பாணம் 1952-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 16-ந் திகதி வியாழக்கிழமை—பிரதிசதம் 10

## மிஷன் ஞாயிறு நிருபம்

[மகாவந். தூத்துக்குடி மேற்றிராணியாண்டவர்]

யேசுவின் திருஇருதயத்தினிடம் நமக்கு மிகவும்பிரியமுள்ள சகோதரர்களே! பிள்ளைகளே!

மெய்யான கடவுளும், மெய்யானமனிதனுமான யேசுக்கிறீஸ்துநாதர் மனுக்குலத்தை இரட்சிக்கும்பொருட்டுக் கடைசித்துளி பரியந்தம் தமது விலைமதிக்கப்படாத இரத்தத்தைச் சிந்தி உயிரைக்கொடுத்து மரணத்தையும், நரகத்தையும் வென்று ஜெயசீலராய் உயிர்த்தெழுந்து இரட்சணியஅலுவலை முடித்துத் தமது பரமபிதாவிடம் போகுமுன் திருவாய்மலர்ந்தருளிய ஒப்பற்ற பிரகடனமாவது: "பரலோகத்திலும் பூலோகத்திலும் எனக்குச் சர்வஅதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் போய்ச் சகலசாதி சனங்களுக்கும் உபதேசித்துப் பிதாவுடையவும், சுதனுடையவும், இஸ்பிரீத்துசாந்துடையவும் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவற்றையும் அநுசரிக்கும்படி அவர்களுக்குப் போதியுங்கள். இதோ நான் உலகமுடியுமட்டும் எந்நாளும் உங்களோடுகூட இருக்கிறேன்" (மத். 28-ம் அதி.)

இந்தப்பிரகடனத்தை நேரடியாக் காதாரக் கேட்டவர்களில் ஒருவர் யாரென்றால், பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவராகிய தோமைஅப்போஸ்தலர். இவர் பற்பலதேசங்களையும், கடல்களையும்கடந்து கடைசியாய் வேதம்போதித்த தேசம் நமதுபாரதத்தாயாகிய இந்தியாவே. இவர் கி. பி. 52-ம் வருடம் தென்இந்தியாவில் மேற்குக் கரையோரத்திலுள்ள சிரங்கனூரில் இறங்கினார் என்பது பாரம்பரியசரித்திரம். இதனால்தான் இந்தவருடம் அர்ச். தோமை அப்போஸ்தலர் நமது தேசத்துக்குவந்து திருத்தொண்டாற்றிய 19-ம்நூற்றாண்டுவிழா மிக்க மகிழ்ச்சியுடனும், குதூகலத்துடனும் கொண்டாடப்படுகிறது. தோமை அப்போஸ்தலர் இந்தியாவில் வேதம்போதித்துப் பல்லாயிரம்பேரைச் சத்தியமறையில் சேர்க்கும்போது ஐரோப்பாவில் கிறீஸ்தவ இராச்சியங்கள் கிடையாது.

ஆனால், நாம் இன்றையத்தினம் காண்கிறகாட்சியென்ன? பொதுப்பட ஐரோப்பாக்கண்டம்எங்கும் கிறீஸ்தவமயமாயிருக்கிறது. ஐயோ பரிதாபம்! நமது தேசமோ, கிறீஸ்தவ தேசமென்று சொல்லுவதற்கில்லை. ஏனெனில், இந்தியாவில் கத்தோலிக்கர் தொகை வெகுசொற்பம். இந்தியாவின் சனத்தொகை மொத்தம் 36 கோடியே 18 லட்சம். கத்தோலிக்கர் 41 லட்சத்து 85 ஆயிரம் மாத்திரம்தான். இந்தியாவில் நூறுபேரை எடுத்துக்கொண்டால் இரண்டுபேர் முதலாய்க் கத்தோலிக்கர்அல்ல. கிறீஸ்தவர்கள் சொற்பமாயிருக்கிற நாடுகள்தான் மிஷன்நாடுகள்

இப்பேர்ப்பட்ட நாடுகளை மனந்திருப்பும்பொருட்டுத்தான் காலஞ்சென்ற மிஷன்நாடுகளின் பாப்பானவர்என்ற புகழ்பெற்ற 11-ம்பத்திநாதர் 1926-ம்ஆண்டு சித்திரைமாதம் 14-ம்தேதி விடுத்தநிருபத்தில் ஐப்பசிமாதக் கடைசிஞாயிறுக்கு முந்தியதினநாளை மிஷன் ஞாயிறு நாளாகக் கொண்டாட வேணுமென்று ஆக்கியாபித்தார். ஆகவே, இந்தவருடம் ஐப்பசிமாசம் 19-ம்தேதி மிஷன் ஞாயிறு. மாதக்கடைசி ஞாயிறு 26-ம்தேதி கிறீஸ்துஇராசாவின் திருநாள். இந்தவருடம் அர்ச். தோமை அப்போஸ்தலர் இந்தியாவுக்குவந்த 19-வது நூற்றாண்டுவிழா ஒருபக்கம். நமது ஞானப்பிதாவும், அப்போஸ்தலருமான அர்ச். சவேரியார் இறந்த நான்காம்நூற்றாண்டு மற்றொருபக்கம்.

ஆனதுபற்றி இந்தவருடம் ஏனையவருடங்களைவிட மிஷன் ஞாயிறுதினத்தை மிக்கஆர்வத்துடனும், தாராளமனதுடனும் கொண்டாடவேண்டும். முதன்முதல் நமதுகத்தோலிக்கர் எல்லோரும் உத்தம கத்தோலிக்கராகவும், அப்போஸ்தலர்களாகவும் திகழவேண்டும். நமது சத்தியமறை நமது செல்வநாட்டில் செழித்தோங்காமல் இருப்பதற்கு ஒரு முக்கியகாரணம், பழைய கிறீஸ்துவர்களின் துர்மாதிரிகையே. இப்பேர்ப்பட்ட போலிக்கிறீஸ்தவர்களிடமிருந்து உப

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## சண்டைப்பீதியா? சமாதானபீதியா?

(சென்றவாரத் தொடர்ச்சி)

பெற்றோரும்பிள்ளைகளும் இனந்தெரியாமல் இருக்கும்படியாகக் குழந்தைகளின்பெயரை மாற்றிவிடுகின்றனர். எந்தத்தாயின் மனம் கொதிக்காது? எதிர்த்த பெற்றோரை இழுத்துக்கொண்டு போய்ச்சிறையில்தள்ளி வதைத்துக் கடினவேலைகளால் வாட்டுகின்றனர். தருணத்துக்குக் காத்துக்கொண்டிருக்கின்றனர். இந்தஹங்கேரியர் ஆஸ்திரியாவிலுள்ள அநேகம் பேரோடு கூட்டு. ஆஸ்திரியாவிலே அமெரிக்கா, பிரித்தானி, பிரான்ஸ், ருஷியபகுதிகளென நான்கு இருக்கின்றன. தாய்தந்தையைத் தம்பி, தங்கை பார்த்துப் பலஆண்டுகள். ஒருவர் ஒரு பகுதியில். இன்னொருவர் இன்னொருபகுதியில. கல்லெறிதூரந்தான். எனினும், ருஷியபகுதிக்குச்சென்று சிறையில்தள்ளப்படப் பயம். ஹங்கேரிய அனுதாபிகள் இங்கும்உண்டு. ஹங்கேரியவாசி எவனுக்காவது கம்யூனிஸம் தண்டனை விதிக்கும்போது இந்தமறைந்தபடைக்குக் கோபத்தால் நடுக்கம், ஆத்திரம். கம்யூனிஸக் கரடியைத் தொலைக்க வைராக்கியம் அதிகரிக்கிறது. ஸ்ராலினுக்கு இத்தேசவாசிகளின் உள்ளப்பற்றுத் தெரியாமலா இருக்கிறது?

### போலாந்து

தேசமுழுவதும் ஒருபெரிய சிறைக்கூடம். இளைஞர்கள் கம்யூனிஸகொள்கைகளைக் கைக்கொண்டனர். எனினும் மற்றவர்களுக்கு என்ன? வெறுப்பு. போனஆண்டிலே எதிர்ப்பு பகிரங்கமாக ஆரம்பமாகிவிட்டது. சித்திரைமாதம் 9-ம் தேதி ஒரு ருஷியன் இருபோலாந்துவாசிகளோடு தர்க்கமாடினான். ஒருவனைச் சுடப்போனான். மற்றொருவன் துணைக்குவந்தான். இருவரையும் சுட்டுத்தள்ளினான். உள்ளூர்வாசிகள் ஓடிவந்தனர். ருஷியன் ஓட்டம். வழியில் ஒரு டக்றரையும், ஒரு பெண்ணையும் சுட்டுவிட்டு ஒரு சுரங்கத்தில் போய் ஒளித்தான். பொலிஸ் படைவந்தது. அந்தருஷியனைப் பிடித்துக்கொடுக்கும்படி ஆர்ப்பாட்டம். சேனைவந்தது. அதன்மேல் கல்மாரி. போலாந்துச்சேனை தடுத்திராவிடில் அன்று ருஷியபடையிலே பலர் குழிக்குப் போயிருப்பர். ஆவணிமாதம் கடலிலே ஒரு கப்பலில் ருஷியஅதிகாரிகளைக் கிடங்கில் போட்டு அடைத்துவிட்டுப் போலாந்துச்சிப்பந்திகள் சுவீடனில்சென்று அடைக்கலம்புகுந்தனர். மூன்று போலாந்த ஆண்களும், ஒரு பெண்ணும் விமானத்துறையிலிருந்த ருஷியரைத் தொலைத்துவிட்டு ஒரு பிளேனில்பறந்து சுவீடனில் தஞ்சமடைந்தனர். ருஷியர்களுக்குப்பயம். மீதியாயிருக்கும் இரண்டொரு செல்வாக்குள்ள போலாந்துக்காரர்கள் சதிமானம்செய்தார்கள் என வியாச்சியம். சதிமானம் உண்மைதான்என்பது பலர் அபிப்பிராயம். பட்டணங்களில் அளவுக்கு மிஞ்சி மக்கள் குடியேறியிருக்கின்றனர். 2-வதுஉலக யுத்தத்தில் ஏறக்குறைய இரண்டு கோடிக்குமேல் ருஷியர் இறந்துபட்டனர். (மற்றநாடுகளில்

— ஜெயம்ஜீ —

எண்ணிக்கை இதைவிட மகாசொற்பம்.) 1946-ம்ஆண்டும்பஞ்சத்தினால் ருஷியாவில் தொலைந்தவர்களின் கணக்குத் தெரியுமா? கூட்டுப்பண்ணையின் கூத்தைக்கண்டு சோவியற்அரசே அஞ்சி அம்மக்களைப் பட்டணங்களுக்கு அனுப்புவதினால் ஏற்படுகிறதுஅவதி. அடிமைச்சிறைகளில் (Forced labour camps) இரண்டுகோடிக்குமேல் இருக்கின்றனர். இக்காரணங்களை முன்னிட்டே சண்டையிடச் சோவியற்ருஷியாவுக்குத் தயக்கம்என்று ஒருவர் எழுதுகிறார். இவர் யுத்தகாலத்திலே ருஷியாவில் இருந்தவர். இங்கிலாந்தில் பெரியபத்திரிகை ஒன்றின் ருஷியநிருபர்: ருஷியமக்கள்மேல் பிரியம்உள்ளவர், எட்வாட் இராங்ஷா. இவர் சொல்லும் இக்காரணங்களின் சுருக்கம்—ருஷியா சண்டை தொடங்காததற்குக் காரணம் ஆயுதப்பஞ்சமல்ல, ஆள்பஞ்சமே.

### நடுநிலை வகிக்கும் நாடுகள்

யுத்தவெறியே தன்குறிக்கோளாகக்கொண்ட சோவியற்ருஷியா ஆள்பஞ்சம் ஒன்றினாலா யுத்தத்தைத் தவிர்க்கத் தேடுகின்றது? தற்சமயம் நடு

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### ஆசா. யோசேவாஸ் முனிவர்

இலங்கையின் பதினேழாவது நூற்றூண்டு அப்போஸ்தலரான ஆசா. யோசேவாஸ் முனிவர் கோவைநகரிலே பிறந்தஇடமானது ஓர்தேசீய ஞாபகசின்னமாகப் போர்த்துக்கேயஇந்திய அரசாங்கத்தாலே பிரகடனஞ் செய்யப்பட்டிருக்கிறது. 1650-ம ஆண்டுவரையில்பிறந்த யோசேவாஸ்சுவாமியார் இலங்கைத்தீவு கத்தோலிக்க சமயவிரோதிகளான ஒல்லாந்தரது ஆட்சியின் கீழ் இருந்தகாலத்திலே ஓர் தொழிலாளிபோன்று மாறுவேடம்பூண்டு இங்குவந்துசேர்ந்தார். அந்நாளிலே கத்தோலிக்க சமயம்சட்டவிரோதமானதாகப் பிரசித்தஞ் செய்யப்பட் டிருந்தது. தவறிப்போனவர்களும், அலட்சியமாகக் கைவிடப்பட்டவர்களுமான கத்தோலிக்கரைத் திரும்பவும் இவர்சத்தியமறையில் கொண்டுவந்து சேர்த்தார். 1701-ம் ஆண்டு அவர்மரிக்கும்போது 15 கோவில்களுடனும், 400 சின்னக்கோவில்களுடனும கூடிய 70,000 பேரைக்கொண்ட ஓர்கத்தோலிக்க சனசமூகத்தை இலங்கையில் ஆக்கியிருந்தார். இவருக்கு முத்திப்பேறுபெற்ற பட்டம் அருளுதற்கானவிசாரணை ரோமாபுரியிலே சித்திகரமாக நடைபெற்றுவருகிறது.

### வண. மத்தியோசுவாமியார்

இல்லங்களிலே திரு இருதய இராசாங்கம் ஸ்தாபகஞ் செய்வதை அடியிட்டவரான வண. மத்தியோ கிறூலி சுவாமியார் திருஇருதயநாதர் சபையிலே ஓர் சந்நியாசியாரான 60-ம் ஆண்டுநிறைவைச் சமீபத்திலே கனடாதேச மொண்றியல்நகரிலுள்ள தயாபரமாதா ஆஸ்பத்திரியிலே தாம்நோய்வாய்ப்பட்டுக்கிடக்கும் அறையில் கொண்டாடினூர். இன்றைய உலகிலே செபமாலைப் படையணியின் பெரிய தளகர்த்தராகவிளங்கும் வண. பற்றிக் பெயிற்றன் சுவாமியாரைப்போலவே இவரும் தமது இளமையிலே பலவருடகாலமாக உலகப்பிரசித்திபெற்றபிரசங்கியாராகத் திகழ்ந்தார். “உலகஞ்சுற்றிவரும்குரவ” ரென அறியப்பட்டிருந்த இவரது அயராமுயற்சியாலே உலகிற் பலநாடுகளிலும் லட்சக்கணக்கான இல்லங்களில் திருஇருதய இராசாங்கம் ஸ்தாபிக்கப்படலாயிற்று. தற்போது 77வயசுடையவராய் இருந்தபோதிலும் இவர் உடல்தளர்ந்தும் உள்ளம்தளராதவராய் இருந்துவருகின்றூர்.

### விசுவாசிகளான மிஷனரிமார்

பரிசுத்தபாப்பரசர் “சுவிசேஷதூதர்கள்” எனும்நாமத்துடன் விடுத்த மிஷன்கள்பற்றிய தமதுசாதாரண நிருபத்திலே வேதபோதக நாடுகளில் கத்தோலிக்கமிஷனரிமாருக்குச் சாதாரணகத்தோலிக்கர் துணையாகச்செல்ல முன்வர வேண்டுமென அழைத்திருந்தார். அதன்பேரிலே முதலாவது அமெரிக்க குடும்பத்தினராகச் சின்சினூத்தி நகரைச்சேர்ந்த திரு. ஜேம்ஸ் ரூேகன்அவர்களும், இவர்பாரியாரும் முன்வந்திருக்கின்றனர். இவர்கள்தம்முடன் மூறையேஐந்து, மூன்று வயதுடைய தங்கள்பிள்ளைகளையும் அழைத்துச்செல்வர். திரு. கோர்மன்அவர்கள் டேர்பன்நகரிலே ஐரோப்பியர்கள் அல்லாதாருக்கென இருந்துவருகின்ற 8-ம் எட்வாட்அரசரின் ஆஸ்பத்திரியில் நோயாளரைப்பராமரிப்பாருடன் சேர்ந்துகொள்வார். இவர்பாரியார் யாக்குவெற்சர்வகலாசாலைப் பட்டதாரியாவர். இருவரும் சிறந்தகத்தோலிக்க எழுத்தாளர்கள்.

### பாப்பரசரின் சுகவீனம்

பர்சுத்தபாப்பரசர் சுகவீனங்காரணமாகச் சமீபத்திலே இருதினங்களாய்ப் படுக்கையிலிருந்து பின்னர்சுகமடைந்து தமதுவழமையானபேட்டிகளை அளித்துவருகின்றூர். அவர் எவ்விதசுகத்தாழ்வுகண்டபோதிலும் தமது பழையநண்பரும், சொந்தவைத்தியருமான புரூபெசர் கலீஸி-லிஸி அவர்கள்உட்படஎவருமே அவர் மிதமிஞ்சிவேலைசெய்வதைத தடுத்துக்கொள்ள முடியாதிருக்கின்றனர். அவர்களுக்கெல்லாம் அவர் வழமையானபதிலையே அளித்துவருகின்றூர். அதாவது: “பாப்பரசர் எப்போதுமே ஆரோக்கியமாக இருக்கவேண்டும்; பாப்பரசர்ஒருவர் மரணிக்குமிடத்து, மற்றொருவர் தெரியப்படுகின்றூர்” என்பதுவே. “களைகொண்டிருக்கக் காலநேரமில்லை” என்று 11-ம் பத்திநாதபாப்பானர் கூறிவந்ததை இது ஞாபகப்படுத்துகின்றது.

### வத்திக்கானுக்கு ஸ்தானிகர்

அமெரிக்கஐக்கியதேச பிரசாதிபதித்தேர்தலிலே சனநாயககட்சி அபேட்சகராகமுன்வந்திருக்கும் கவர்னர் ஸ்ரீவென்சன் அவர்கள் யாதுகூறுகின்றூர்? தாம்ஜனதிபதியாகத் தெரியப்படுமிடத்துப் பரிசுத்தஸ்தானத்தினிடமாக ஓர்ஸ்தானிகரை நியமனஞ்செய்யமாட்டாரெனத் தெரிவித்திருக்கின்றூர். இதுசெய்தி வத்திக்கானிலே வழமையான அமைதியோடும், சாந்தமனத்தோடும் பெறப்பட்டிருக்கிறது. ஏனெனில், அமெரிகக இராசீயப் பிரதிநிதித்துவமானது காலந்தோறும் மாற்றமடைகின்ற ஓர்அமெரிக்க உள்நாட்டுவிஷயமாகுமென அங்கே சுட்டிக்காட்டப் படுகின்றது. ஆனல், றூஸ்வெல்ற்ஜனதிபதியும், ட்றூமன்ஜனதிபதியும் செய்ததுபோலத் தமதுசொந்தப்பிரதிநிதிஒருவரைத் தாம் நியமிக்கமாட்டாரெனக் கவர்னர் ஸ்ரீவென்சன் அவர்கள் சொல்லவில்லையெனக் குறிக்கப்படுகிறது.

# யேசுவின் சிறிய புஷ்பம்

1. சின்ன மலர்த்தெரேஸ் அம்மணி யேயெனில்
   சிந்தைக்கு ஆனந்தமே!
   வன்ன மலர்ப்பதஞ் சென்னியில் வைத்துநாம்
   வாழ்த்தினம் வாழ்த்தினமே!

2. பாலக யேசுவின் பாக்கிய மாம்திரேஸ்
   பக்திப் பரிமளரேஸ்
   சால வருள்மழை தான்பொழி பூங்கரத்
   தண்லிசியே முகிலே!

3. பூவினில் ஐயைந்து ஆண்டுக ளாய்வாழ்ந்த
   புண்ணிய கன்னிகையே!
   காவினில் பூத்தநாண் மாமலரே! உயர்
   கற்பினில் மாணிக்கமே!

4. கர்த்தன் சிறுவழி காட்டியே வாழ்ந்தஎம்
   கன்னிகா ரத்தினமே!
   எத்தனை வேண்டுமோ அத்தனை யும்வரம்
   ஈந்தருள் உத்தமியே!

5. மனுவுரு வானசம் மனசென்றே மாண்போடு
   வழிவழி மொழிவாரே
   புனித வதியேபொன் னுலகினின் றென்றுமே
   பூமழை பொழிவீரே

6. கற்பனைக் குள்ளடங் காத்தற்ப ரித்தியாகக்
   கண்ணுடி பாரீரே!
   அற்புத நாதரின் பொற்பத நீழலில்
   ஆசிகள் தாரீரே!

7. பிள்ளைகளி னுள்ளம் போலிங் கொழுகியே
   பேரின்ப பெய்திடவே
   வள்ளலாம் யேசு மலர்ப்பதம் வேண்டி
   வரமழை பெய்திடுவீர்!

— ஞானி

# சண்டைப்பீதியா? சமாதானபீதியா?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலைவகிக்கும் நாடுகள் சண்டையென்றூல் சோவியற்பக்கம் சேராவா? அந்நாடுகள்எவை? முதல் முதல்சுவீடன், சுவிற்சர்லாந்து. இந்நாடுகளிலே— சண்டைக்குச் சென்றநாடுகளிற்போல இடிந்த கட்டடங்களின் கல்லும், மண்ணும், குப்பையுமில்லை. தெருக்களில் பசிப்பிணிபிடித்து எலும்புந்தோலுமாய் அலையும் உயிருள்ள சவங்களுமில்லை. கடந்த யுத்தத்தில் நடுநிலைவகித்ததற்காக இந்தநாடுகளுக்குச் சொல்லொண்ணுத்திருப்தி. இவைகள் ஒருகட்சியிலும சேரமாட்டா. சுவிற்சர்லாந்து ரூஷியாவுடன் வியாபாரம் செய்கிறது. இந்நாட்டிற்குச் சோவியற்ரூஷியா தன்கதவுகளை அடைப்பதில்லை. ரூஷியாவைப்பற்றி இந்நாட்டிற்கு எவ்வளவோ தெரியும். தனது நடுநிலையைக் காப்பாற்றும்படி அங்கு நடப்பதைப்பற்றிக் காதையும்வாயையும் பொத்திக்கொள்ளுகிறது. சுவீடன் ஒருபக்கமும் சேரவேசேராது தனது நடுநிலையைக் காப்பாற்ற ஒரு சேனையைத் தயாரிக்கிறது. இதன் ஆகாயப்படையின் பெருக்கமும் ரூஷியாவுக்கும், இங்கிலாந்துக்கும் அடுத்தபடியில்.

துருக்கிக்கும் ரூஷியாவிற்கும் வெகுநாளையப்பகை என்று தெரியாதா? அத்திலாந்திக் உடன்படிக்கையில் தன்னைச் சேர்த்துக்கொள்ளும்படி துடியாய்த் துடிக்கிறது. இதுவா ரூஷியாவுக்கு உதவிசெய்யும்? இஸ்ரூயேல் தேசத்திற்கும் கம்யூனிஸம்பிடிக்காது. சில நாட்களின்முன் நடந்ததேர்தலில் கம்யூனிஸ்தர்களுக்குப் பெருந்தோலவி. இவைகளெல்லாம சிறு நாடுகள் தானே; ரூஷியாபுகுந்து இவைகளைக் காலால் நசுக்கிவிடுமே என்பீர்களா? ஜேர்மனி பட்டபாடு ரூஷியாவுக்குத் தெரியாதா? அங்கெல்லாம் நுழைந்தால் பொறிக்கிடுக்கில் பிடிபட்ட எலியைப் போலத்தான் முடியும்.

(தொடரும்)

### 80,000 கோயில் மணிகள்

சென்ற மகாயுத்தத்திலே ஹிற்லரின் நாஸிய அரசாங்கம ஜேர்மனியிலும், அது அடிப்படுத்திய ஏனையநாடுகளிலும் எண்பதினுயிரத்துக்குமேற்பட்ட கோவில்மணிகளைப் பறிமுதலாக்கியிருந்தது. இவைகளெல்லாம் உருக்கப்பெற்று யுத்ததளபாடங்களின் உற்பத்திக்குப் பாவிக்கப்படவிருந்தன. ஆயி[illegible] 16,000மணிகள் உருக்கப்படாமல் பாதுகாக்கப்படக்கூடியனவாயின. இவற்றில் அதிகமானவை அடையாளம் கொண்டு கண்டறியப்பட்டமையாலே அவற்றின்சொந்தமான விசாரணைப் பங்குகளுக்குத் திரும்பஅனுப்பப்படவிருக்கின்றன. மேற்குஜேர்மனி மாத்திரம் நாஸிகளின்நடவடிக்கையால் 42,583 கோயில்மணிகளை இழந்தது. இவற்றிலே 24,030 மணிகள் கத்தோலிக்க கோவில்களுக்குரியன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லிசியேபதியில் புதுவேத நாடுகளின் பரிபாலகியின் யூபிலிவிழா

# அர்ச். தெரேசம்மாளின் கல்லறை முன்பாக அகில உலகமும் ஒன்றிக்கின்றது

**1888-ம் ஆண்டு சிறுமி தெரேஸ்மாட்டீன் லிசியேபதிக் கார்மேல் மடத்திற் பிரவேசிக்கின்றாள். குருமாருக்காகச் செபிப்பதும், வேதபோதகருக்கு ஞானஉதவிசெய்வதுமே தனது சீவியநோக்கமென அறிவிக்கின்றாள்.**

**1927-ம்ஆண்டு அர்ச். தெரேசம்மாள் புதுவேதநாடுகளின் பரிபாலகியாகத் திருச்சபையால் அறிக்கையிடப்படுகின்றாள். தனது பாதுகாவலை எவ்வளவு கிரமமாகச் செய்திருக்கின்றாள் என்பதை இன்று அவளது கல்லறையண்டை அகிலஉலகமும் அறிக்கையிடுகின்றது.**

பரிசுத்தபிதா 12-ம்பத்திநாதர் தாமே இந்த 25-ம்வருடஞாபகத்தைச் சிறப்பாக லிசியேபட்டினத்திலே, கார்மேல்மடத்தில் கொண்டாடவேண்டுமென விரும்பினர். அவரதுவிருப்பத்தின்படி ஒழுங்குகள்செய்யப்பட்டன. அர்ச்சியசிஷ்டவளின் திருநாளன்று கார்மேல்மடச் சிற்றாலயத்தில், அவளுடையகல்லறைமுன் சகலதேசங்களும் ஒன்றிக்கின்றன. திருநாளுக்குரிய இருபத்துநான்கு மணித்தியாலங்களிலும் திவ்வியஇரட்சணியப்பலி இங்கு புதுப்பிக்கப்படுகின்றது. உலகின் பற்பலதேசங்களிலும் அதேநேரத்தில் திவ்வியபலியை ஒப்புக்கொடுக்கும் குருப்பிரசாதிகளோடுஒன்றித்து, இருபத்துநான்குமேற்றிராணிமாரோ அல்லது குருமாரோ இந்த ஆலயத்தில் இதை நிறைவேற்றுகிறார்கள். இவ்விருபத்துநான்கு பிரதிநிதிகளும் தாங்கள்பதிலளிக்கும் தேசங்களிலொன்றில் உதித்தோர், அல்லதுஅங்கு தொண்டாற்றுவோராவர்.

2-ந் திகதி வியாழக்கிழமை விடியுமுன்தொடங்கியமழை 3-ந் திகதிவெள்ளிக்கிழமை பகல் 12 மணிவரையும் ஓயாது பெய்துகொண்டிருக்கின்றது. ஆனால், மழையும்குளிருந்தான் தடையாகுமோ? அர்ச். தெரேசம்மாள் பரலோகத்திலிருந்து பூலோகத்திலிருக்கும் தனதுகல்லறையை நோக்கும் பொழுது—அங்கு முழந்தாட்படியிட்டிருக்கும் மேற்றிராணிமார், குருமார், சந்நியாசர், கன்னியாஸ்திரிமாரின் வதனத்தையும் உள்ளங்களையும் பார்க்கும் பொழுது—தனதுபேராசை நிறைவேறுவதையிட்டு எவ்வளவுதான் தேவனைப் போற்றுகின்றாளோ?

வியாழக்கிழமை நடுச்சாமநேரம். கார்மேல்மடத்துமணிகள் சப்திக்கின்றன. ஆலயத்தின்மகாபீடமும் அர்ச்சியசிஷ்டவளின் கல்லறையும் பிரகாசிக்கின்றன. பீடத்தின்வலதுபுறத்தில் திரைமறைவில் கார்மேல்மடத்துக் கன்னியாஸ்திரிமார் ஒன்றுசேர்ந்திருக்கின்றனர். அவர்கள்மத்தியில் அர்ச்சியசிஷ்டவளின் கடைசிச்சகோதரியாகிய 80 வயதுக்குமேற்பட்ட சங். செலீனும்இருக்கின்றாள். பீடத்தின்முன் மேற்றிராணிமார், குருமார், விசுவாசிகள் நெருங்கியிருக்கின்றார்கள். அவர்கள் தலைமையில் பரிசுத்தபாப்பரசரின் விசேஷ பிரதிநிதியாக மகாவந். நிக்றிஸ்ஆண்டவரவர்கள் வீற்றிருக்கின்றார்.

12 மணிஅடித்ததும், சீனதேசத்தில் யிங்கோமேற்றிராசனத்தின்ஆயர் ஓர்சீனக்குருப்பிரசாதியோடு பீடத்தின்முன் நிற்கின்றார். குருப்பிரசாதி தமதுசுயபாஷையில் தமதுதேசீயமக்களுக்கு ஓர்பிரசங்கம்செய்கிறார். அவருடையவார்த்தைகளும், பின்தொடரும் மேற்றிராணியாரின் பாடற்பூசைக்கீர்த்தனைகளும், பூசைமுடிவில் சீனப்பாஷையிற் சொல்லப்படும் பரமண்டலமந்திரமும் ஆகாயவசனிமூலம் சீனதேசமட்டும் கொண்டுசெல்லப்படுகின்றன. இவ்வாறுதொடங்கிய பலியும், ஞானக்கீதமும் அடுத்துவரும் இரவு 12 மணிவரையும் முடிவுகாணாது தொடருகின்றன. ஒவ்வொருமணித்தியாலமும் இவ்விதமே பலியுடன் பிரசங்கமும், செபமும் வெவ்வேறுபாஷையில் உலகமடங்கலும் ஆகாயத்திற்பரவுகின்றன.

சீனதேசத்தைத்தொடர்ந்து வியற்னும், இந்தோனேசியாவும், அதன்பின் இரண்டுமணிக்கு இந்தியா, பாகிஸ்தான், பர்மாவும், மூன்றுமணிக்கு இலங்கையும், நாலுமணிக்குப் பாரசீயா ஈராக்குமாகத் தொடருகின்றன. இந்தியா, பாகிஸ்தான், பர்மாவின்பிரதிநிதியாகச் சேலம்மேற்றிராசனத்தின் ஆயராம் மகாவந். செல்வநாதன் ஆண்டவரவர்கள் பிரசங்கித்துப் பலியை ஒப்புக்கொடுக்கின்றார். இலங்கையின்பிரதிநிதியாக வண. மிக்கேல்சாமி O. M. I. சுவாமியார் பிரசங்கம்செய்து பலியைநிறைவேற்றுகின்றார். காலை 7 மணிக்கு மகாவந். நிக்றிஸ்ஆண்டவரவர்கள், அதேநேரம் வத்திக்கானில் தமது சிற்றாலயத்திற் பலியை ஒப்புக்கொடுக்கும் பரிசுத்தபாப்பானவரோடு ஒன்றித்து இங்குஅதே பலியை நிறைவேற்றுகின்றார்.

************************

**லிசியேபதி யூபிலிவிழாவின் போது இலங்கைப்பிரதிநிதியாக அழைக்கப்பெற்றுச் சென்றிருந்தவரும், யாழ்ப்பாண மேற்றிராசனததைச் சேர்ந்தவருமான வண. A. மிக்கேல்சாமி சுவாமியவர்கள் எழுதியனுப்பிய யூபிலிவிழாநிகழ்ச்சிகளின் வரலாறும், தாம அங்கு கேட்டுக்கொள்ளப்பட்டபடி தமதுதாய்மொழியாம் தமிழ்மொழியில் அவர் நிகழ்த்திய பிரசங்கமும்.**

************************

ஐரோப்பா, ஆபிரிக்கா, அமெரிக்கா, கனடா முதலிய தேசங்களெல்லாம் ஒன்றின்பின் ஒன்றாகத் தொடர்ந்தபின் கடைசிப்பூசைப்பலி இரவுபதினொரு மணிக்கு யப்பானிய மேற்றிராணியாரான (F)வுருய்யா ஆண்டவரவர்களால் யப்பான், கோறியதேசங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டு நடுச்சாமத்துடன் மாபெருந்தினம் முடிவாகின்றது.

பிரதிநிதிகள் நடுப்பீடத்திற் திருச்சடங்குகளை நிறைவேற்றிச்செல்ல, இரவும்பகலும் வேறநேககுருமார் மறுபீடங்களிற் பலிஒப்புக்கொடுத்தார்கள். ஆராதனைகள் நடைபெற்ற நாள்முழுவதும் ஆலயம்நிறைந்தேயிருந்தது. பலியும் செபமும் பீடத்திலிருந்து பரலோகமட்டும் தொடர்பாகச்செல்ல, விசுவாசிகளும் அடக்கஒடுக்கத்துடன் செபித்துக்கொண்டு சிற்றாலயத்திற் பிரவேசிக்கிறவர்களும், வெளியேறுகிறவர்களுமாகக் காட்சியளித்தார்கள்.

ஆராதனைகள், செபங்களின் பொதுக்கருத்தையும் பரிசுத்த பாப்பரசரே வெளியிடலானார். அவையாவன: சகலகுருப்பிரசாதிகளின் அர்ச்சிப்பும், தற்கால அவசியங்கட்கிணங்க வேதபோதகரின் வளர்ச்சியும், ஒவ்வொருநாட்டுக்கும்—விசேஷமாய் நெருக்கிடைகட்குஇரையாகும்நாடுகளுக்கும்—உரிய இகபரநன்மைகளுமேயாம்.

மாலை 8-30 மணிக்கு லிசியேநகரில் அர்ச். தெரேசம்மாள்பேரால் கட்டி எழுப்பப்பட்டிருக்கும் மகாஆலயத்தில் வேதபோதகரான வேதசாட்சிகளின் அர்ச்சியசிஷ்டபண்டங்களுடன் ஓர்சுற்றுப்பிரகாரமும் அருட்சிக்குரிய மேரையாக நிறைவேறியது.

பாலகயேசுவின் சின்னமலரே! உண்மையாகவேநீர் தேவஅன்பிற்பெருத்து மலர்ந்து பரிமளம்வீசும் றோசாவாக மாறியிருக்கிறீர். உமது சுகந்தம் உலகம்முழுவதையும் நிரப்பிச் சகலரையும் கவர்ந்துகொள்ளுகின்றது. இவ்வல்லபமிக்க கவர்ச்சியால் சகல மனிதரையும் ஒன்றித்துக் கிறீஸ்துவின் சமாதானத்தில் நிலைநாட்டுவீராக!

### இலங்கைக்கென்று குறிக்கப்பட்டநேரத்தில் செய்யப்பட்ட பிரசங்கம்:

பாலகயேசுவின் சிறியபுஷ்பமே!
எங்கள்அன்புள்ள பரிபாலியே!
நாங்கள்உம்மை வாழ்த்துகின்றோம்.

ஸ்ரீலங்காவின்மக்களே! அன்புள்ள சகோதரரே!

உங்கள் அனைவர்பேராலும் இத்திருப்பதியில் நிற்கின்றோம்; உங்கள் அனைவருக்காகவும் இதோ அர்ச். சின்னத்தெரேசம்மாளின் கல்லறை அருகாமையில் திவ்வியபூசைப்பலியை ஒப்புக்கொடுக்கப் போகின்றோம். இதுவே அர்ச். தெரேசம்மாள்வசித்த கார்மேல் மடம். இத்தருணத்தில் எம்மைச் சூழநின்று தெரேசம்மாளின்சகோதரி செலீனும், ஏனையகார்மேல் கன்னியாஸ்திரீமாரும், பலதேசங்களைச்சேர்ந்த மேற்றிராணிமார் குருமாரும், கிறீஸ்தவர்களும் எம்முடனும், எமக்காகவும் மன்றாடுகின்றார்கள்.

நிகழும்வருடமானது இந்திய இலங்கைமக்களுக்கு ஓர்விசேஷ ஞாபகவருடமன்றோ! இற்றைக்கு நானூறுவருடங்களுக்குமுன் தமது பிரயாசமுள்ள போதனையாலும், சாதனையாலும் எமதுதேசத்தில் கிறீஸ்துநாதரின் ஞானஒளியைப் பிரகாசிக்கச்செய்தார், அர்ச். பிரான்சீஸ் சவேரியார். இவரது திருமரணத்தின் 400-வது வருடாந்தவிழாவை முன்னிட்டு எங்கள்யாவரினதும் உள்ளங்களும் வருகிறமார்கழிமாதம் கோவைநகரில் ஒன்றிக்கும். அதுபோலவே இந்தக்கார்மேல் மடத்திலிருந்து தமது அந்தரங்க செபத்தினாலும், பரித்தியாகத்தினாலும் சுவிசேஷபோதகர்களுக்குப் பேருதவிசெய்து, ஆத்துமாக்களுக்கு மனந்திரும்பும் வரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொடுத்தாள் அர்ச். தெரேசம்மாள். மரணத்தின்பின்பும் அவள் திருச்சபையின் வேண்டுதலுக்கிணங்கிப் புதுவேதநாடுகளில் ஒன்றாகிய எங்கள்தேசத்தையும் தனதுவல்லபமிக்க பாதுகாவலில்ஏற்றுக் கொண்ட 25-வதுவருடாந்த விழாவைமுன்னிட்டு நாம் அனைவரும் இன்று இந்நேரம் இங்குஒன்றிப்போமாக!

1927-ம்ஆண்டு புதுவேதநாடுகளின் பரிபாலகியாக அர்ச். தெரேசம்மாள் அறிக்கையிடப்பட்டபோது எமது தேசத்திற் காட்டப்பட்ட அக்களிப்பையும், நன்றியையும் இன்றும்பலர் ஞாபகத்தில்வைத்திருக்கிறார்கள். அன்றுமுதல் அர்ச். தெரேசம்மாள் பேரிற்பக்தி தீபோற் பற்றிவளர்ந்து வருகிறதல்லவா? அன்புடனும், நம்பிக்கையுடனும் யாவரும் இவளைச் "சின்னமலர்" என்று அழைத்து மன்றாடிவருகிறோமல்லவா? எமது ஆலயங்களிலும், இல்லங்களிலும் சிறப்பானபீடங்களில் இவள்வணங்கப்பட்டு வருகின்றாளல்லவா? எத்தனை விசாரணைப்பங்குகளில் அர்ச். தெரேசம்மாளின் பாதுகாவலில் எங்கள்இளைஞர் ஒன்றுசேர்க்கபபட்டு இவளுடையபுண்ணியபாதையில் வழிநடத்தப்பட்டும், இவளுடைய வீரத்துவமுன்மாதிரிகையால் திடப்படுத்தப்பட்டும் வருகின்றார்கள். இவளுடைய அற்புதசலுகைகளை எம்மத்தியில் நன்றியுடன்பாடுவோரும் எத்தனைபேரோ?

இற்றைக்கு ஐந்துவருடங்களின்முன் நடந்தேறிய இவளுடையதிருமரணத்தின் 50-ம்வருடாந்த விழாவானது இலங்கைவிசுவாசிகள் இப்பரிபாலகிமட்டில் தங்கள்அன்பைக் காட்டுவதற்கும், ஏனையோர் இவ்வன்பின்ஆழத்தைக் கணிப்பதற்கும் ஏற்றசந்தர்ப்பமாயிற்றே. நீடியபக்திவேகமான ஆயத்தங்களின்பின் நாம் வெண்ணப்பூரில் மகாநாடுகூடி, நன்றிசாற்றி, அர்ச். தெரேசம்மாளின் போதனைப்படிஎமது விசுவாசத்தையும், தேவநேசத்தையும் திடப்படுத்தியதை இன்று நினைந்துகொள்ளுவோமாக. அத்தருணம் இந்தஅர்ச்சியசிஷ்டவளுக்குப் பாதகாணிக்கையாக்கப்பட்ட ஞானமலர்ச்செண்டானது, இலங்கையின் சகலகோணங்களிலுமுள்ளகிறீஸ்தவர்களின் காணிக்கையானதால், ஆழ்ந்தபரந்த பக்தியின் சின்னமுமாகச் சிறந்ததன்றோ?

பாலக யசுவின் சின்னமலரே; அம்மணி!

அன்றுநாம்செய்த காணிக்கைகளை இன்றுஒருமனப்பட்டு, இன்னும் அதிகவேகமான அன்புடன் புதுப்பிக்கின்றோம். அம்மணி!

எங்கள்அனைவரின் பிதாவும், கிறீஸ்துநாதரின் பதிலாளியுமான பரிசுத்த பாப்பானவருக்காக மன்றாடுகிறோம்.

எங்கள்வேதபோதகர்களான மேற்றிராணிமார், குருமார், சந்நியாசர், கன்னியாஸ்திரிமாரைப் பரிசுத்தப்படுத்தியருளும்; திடப்படுத்தியருளும்; வழிநடத்தியருளும். உமது சீவியமுன்மாதிரிகையைப் பின்பற்றி முட்களாகியகஸ்திதுன்பங்களை நாம் அன்புடன்சகித்தும், புஷ்பமாகிய கிறீஸ்துவின் அன்புஆதரவையே மற்றவர்களுக்குக் கொடுத்தும எமதுசம்காதரர் அனைவரையும் கிறீஸ்துநாதரின்மந்தைக்குரிய உண்மையான சமாதானத்திலும் சீவியவிருத்தியிலும் வழிநடத்த உதவி புரிந்தருளும்.

எங்கள்நேச அதிகாரிகளை ஆசீர்வதியும்; சகலருக்கும் கர்த்தாவும் பிதாவுமான தேவனின்வழிகளில் இவர்களை நடத்தியருளும்.

எங்கள்குடும்பங்கள் யாவற்றையும் ஆசீர்வதித்தருளும். தேவபிள்ளைகட்குரிய மெய்ஞ்ஞானத்திலும் புண்ணியவழியிலும் நடத்தியருளும்.

எங்கள்மத்தியில் வியாதியினாலோ, வறுமையினாலோ, வேறெவ்விததுன்பதினாலோ வருந்துவோருக்காக உமதுசலுகையை இரந்துவேண்டுகின்றோம்.

பலபாதேசங்களிலிருந்தும் எங்களுக்கு நன்மைசெய்வோர்மேல் உமதுபரலோகறோசா மலர்மாரியைச் சொரிந்தருளும்.

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பத்திரிசியார் கல்லூரி
யாழ்ப்பாணம்

## 1953-ம் ஆண்டு சேர்தல் தெரிவுப்பரீட்சை

1953-ம் ஆண்டில் சம்பத்திரிசியார் கல்லூரியில் சேரவிரும்பும் மாணவருக்கு அடுத்துவரும் கார்த்திகை மாதம் 1-ந் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஒருதெரிவுப்பரீட்சை கல்லூரிமண்டபத்தில் நடைபெறும். பரீட்சைக்குரிய விண்ணப்பப் பத்திரங்கள் கல்லூரித்தலைவரின்கந்தோரில் கொடுக்கப்படும்.

T. M. F. லோங் சுவாமியார்
கல்லூரித்தலைவர்

சத்தியவேத
**பாதுகாவலன்**

1952-ம் ஆண்டு
ஐப்பசிமாதம் 16-ந் திகதி

## வேதப்பரப்புதல் ஞாயிறு

அன்று ஒலிவேத்துமலையிலே தம்மைப்புடைசூழ்ந்துநின்ற சீஷர்களை நோக்கி: "நீங்கள் உலகமெங்கும்போய் எல்லாச் சிருஷ்டிகளுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவசித்து ஞானஸ்நானம் பெறுபவன் இரட்சணியமடைவான்" என்று நமது திவ்வியஇரட்சகர் திருவாய்மலர்ந்த அரியமொழுகளைச்சிரமேற்கொண்டு இன்று உலகின் எட்டுத்திசைகளிலும், பதினாறு கோணங்களிலும் பரந்துகிடக்கும் வேதப்பரப்புதல் ஞானப்போர்க்களத்தில் விடாமுயற்சியாய், வெற்றிகரமாய்ச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, மனந்திருப்புதலாகிய ஆத்தும இரட்சணிய தொண்டாற்றி வருகின்ற மிஷனரிமார்களுக்குத் தங்கள் செபங்களாலும், தியாகங்களாலும் கத்தோலிக்க மக்கள் அனைவரும் ஒத்தாசை செய்யவேண்டிய பெரியதினம் வருகின்றது. வேதப்பரப்புதல் ஞாயிறின் முக்கியநோக்கம் யாது? அஞ்ஞான அந்தகாரத்திலும், மரணநிழலிலும் நிர்ப்பாக்கியராய் இருந்துவருகின்ற கோடிக்கணக்கான மக்களை விசுவாசத்தின் பிரகாசத்துக்கும், இரட்சணியத்தின் துறைமுகத்துக்கும் கொண்டுவருதலேயாம்.

வேதத்தைப் பரப்புந் தொண்டு, ஆத்துமாக்களை ஈடேற்றுந்தொண்டு. ஆத்தும இரட்சணியதொண்டு. இந்த மகத்தான தொண்டிலே தனதுஞானமக்களுக்கெல்லாம் மிக்கான ஆர்வத்தை உண்டுபண்ணுவதற்கும், அவர்களெல்லாம் அதில்சிறப்பாகப் பங்குபற்றச் செய்வதற்குமாகவே திருச்சபை வேதப்பரப்புதல் ஞாயிற்றைக் கொண்டாடுகின்றது. அதிகாரமுறையிலே சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, வேதத்தைப் பரப்பிவரும் குருமார் மாத்திரமன்று, சாதாரண கத்தோலிக்கரும் வேதப்பரப்புதல் வேலையில் இயன்றமட்டும் ஈடுபடவேண்டுமென்பதே அதன்பேராசையாகின்றது. "பரலோகத்தையும், பூலோகத்தையும் படைப்பதைக்காட்டிலும் ஓர் ஆத்துமத்தை இரட்சிப்பதுதான் அதிஉன்னதமான வேலை" என்றார் அர்ச். அகுஸ்தீனார். "இரட்சணியஆவல் இல்லாதவர்களிடத்தில் தேவநேசம் இல்லை" யென்று அவரே வசனிக்கின்றார். "எவராவது ஆத்துமஇரட்சணிய அவாவிலும் மேலானபலியைச் சருவேசுரனுக்குச் செலுத்தமுடியாது" என்கிறார் அர்ச். கிறகோரியார். "எங்கள் சகோதரரில கவனம் வைத்து, அவர்களின் ஆத்தும இரட்சணியத்தில் கரிசனையாய் இருப்பதைக்காட்டிலும் நாம் கிறீஸ்துநாதரை நேசிக்கிறோம் என்பதைக் காண்பிக்கச்சிறந்த வழிவேறில்லை" என்கிறார் அர்ச். கிறிசோஸ்தம் அருளப்பர். "நாம் ஆத்துமாக்களை மனந்திருப்பும்வேலையில் ஈடுபடும்போது யேசுக்கிறீஸ்துநாதரின் வேலையையே செய்கிறோம்" என்கிறார் அர்ச். சாள்ஸ் பறோமையார்.

இவற்றிலிருந்து ஆத்தும இரட்சணிய தொண்டின் காத்திரத்தை நன்றாக அறிந்துகொள்ளலாம். அதனால் இத்தொண்டில் நாமும் மிக்கான ஆர்வங்கொண்டு நமது செபதபங்களால் அதனைச்சாதிப்போம். சிறியபுஷ்பமாகிய அர்ச். சின்னத்தெரேசம்மாளும், அவிலாவின் அர்ச். பெரியதெரேசம்மாளும் அஞ்ஞானநாடுகளுக்குச் சென்று வேதம்போதித்தவர்கள் அல்ல. ஆயினும் அவர்கள் தங்கள் இடையறாத செபத்தினாலும், தபத்தினாலும் கணக்கற்ற ஆத்துமாக்களை இரட்சித்தார்கள். இரண்டாவது, நம்முடைய உதாரமான தருமங்களினால் அதனைச்சாதிப்போம். கிறீஸ்துநாதரின் பதிலாளியான பாப்பரசர் இந்தத்தருமத்தை நம்மிடம் எதிர்பார்க்கின்றார். நமது மனத்தாராளமான உதவியை ஆவலுடன் கேட்கின்றார். அதனால கிறீஸ்துநாதர்தாமே நாம் கொடுக்கும் பொருளுதவியைப்பெறத் தமது திருக்கரங்களை நீட்டுவார்போல் காணப்படுகின்றார். அதனால், அன்று தினம் நாம எம்மாலான தியாகங்கள் செய்து வேதப்பரப்புதலுக்கு ஆன உதவி புரிவோமாக!

## இஸ்பிரீ. ஆகமனத்தின் பின் 20-ம் ஞாயிறு

(வேதப்பரப்புதல் ஞாயிறு)

### சுவிசேஷ வாசிப்பு

(மத். 9: 35—38)

அக்காலத்தில்யேசுநாதர் சகல பட்டணங்களிலும் கிராமங்களிலும் சுற்றித்திரிந்தும், அவர்களுடைய செபக்கூடங்களில் உபதேசம்செய்து பரலோக இராச்சியத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தும், எவ்விதநோயையும், எவ்விதவியாதியையும் குணமாக்கிக்கொண்டும் வந்தார். அன்றியும், அவர் சனக்கும்பல்களைக் கண்டு, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல் அலைக்கழிக்கப்பட[illegible] ளென்று அவர்கள்பேரில் மனமிரங்கினர். அப்போது, அவர் தம்முடைய சீஷர்களைநோக்கி: வேளாண்மை மிகுதியாக இருக்கிறது; வேலையாட்களோ கொஞ்சமாயிருக்கிறார்கள். ஆகையால், தம்வேளாண்மைக்கு வேலையாட்களை அனுப்பும்படி வேளாண்மை எசமானனை மன்றாடுங்கள் என்று திருவுளம்பற்றினர்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

## தங்கயூபிலி விழா

அர்ச். பிரான்சீஸ் அசீசியாரின் மூன்றாஞ்சபையிலே பரிசுத்தபிதா 12-ம் பத்திநாதபாப்பரசர்சேர்ந்த 50-ம்வருடச் செம்பொன்விழாவைச் சிறப்பிக்கும் முகமாக, உலகின்எண்டிசாமுகமுமுள்ள பிரான்சீஸ்கன் சபையாருடன் சேர்ந்து யாழ்ப்பாணத்திலுள்ள சபையாரும் அகிலஉலக மூன்றாஞ்சபைத் திருநாளைச் சென்ற 12-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பத்திச்சிறப்பாகவும், ஞானப்பரிமளிப்பாகவும்கொண்டாடினார்கள். மூந்திய மூன்றுதினங்களிலும் ஆசனக்கோவிலிலே திரிதினஉற்சவங்கள்நடந்தேறின. திருநாளன்று காலை 7 மணிக்குச் சபைக்கர்த்தரான அதிவண. என். யோசேப் சுவாமியவர்கள் பாடற்பூசை நிறைவேற்றினர். அதிலே ஆசனக்கோவில் கட்டளைக்குரவர் வண. பி. ரி. ஜேம்ஸ்சுவாமியவர்கள் அன்றைய சுவிசேஷவாசிப்பில்அடங்கிய ஓர்சுலோகத்தை—அதாவது "அழைக்கப்பட்டவர்கள் அநேகர்; தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சொற்பப்பேர்" என்ற சுவிசேஷவாக்கியத்தை எடுத்தாண்டு செய்த பிரசங்கத்திலே, பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபையைப் பற்றிச் சிறப்பாக எடுத்துவிளக்கினார். அச்சபையில் சேருவதானது இரட்சணியத்தை நிச்சயப்படுத்த ஓர்சுருக்கமான பாதையென்பதை அழுத்தமாக எடுத்துக்கூறினின்றார். பூசைமுடிந்ததும் சபைஅங்கத்தவர்களுக்குச் சிற்றுண்டி உபசரணை ஒன்று நடைபெறலாயிற்று. சாயந்தரம் திவ்வியசற்பிரசாதஆசீர்வாதத்தின்பின் சென்சாள்ஸ் கலாசாலை மண்டபத்தின்கண் ஆசனக்கோவிற் கட்டளைக்குரவர்தலைமையில் பகிரங்கவிழாக் கொண்டாட்டம் நடைபெறலாயிற்று. அதற்குப் பலகுருப்பிரசாதிகளும், கன்னியாஸ்திரீமாரும், சபைஅங்கத்தவர்களும், மற்றும்அபிமானிகளும் திரளாகச் சமுகமளித்திருந்தார்கள். தலைவர்சுவாமிகளின் ஆரம்பவுரையைத்தொடர்ந்து, பரிமேலர் எஸ். அருளானந்தம்அவர்கள், அர்ச். பிரான்சீஸ்அசீசியாரின் சீவியவரலாற்றையும், அவர்அனுசரித்த தாழ்மை, தூய்மை, எளிமைமுதலாம் சுகிர்தபுண்ணியங்களையும், மற்றும் விசேஷ பத்திமுயற்சிகளையும் தெளிவாக எடுத்துக்காட்டி, அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ் சபையில் பரிசுத்தபாப்பரசர் கடந்த ஐம்பது ஆண்டு [illegible] ஓர் அங்கத்தவராக இருந்துவரும்போது ஏனையோரும் அதிற்சேர்வது உசிதமாகுமென உற்சாகமூட்டி உணர்ச்சிததும்பக் கவர்ச்சிகரமான ஓர் சொற்பொழிவாற்றினர். அவரைத்தொடர்ந்து சபைத்தலைவர் திரு. ஏ. எஸ். பிரான்சீஸ் அவ் மேரிஅவர்கள் சபையின் மூன்றுபிரிவுகளையும், யாழ்ப்பாணத்திலே மூன்றாஞ்சபைஸ்தாபிக்கப்பட்ட வரலாற்றையும் இனிதே எடுத்துக்கூறினர். திரு. எஸ். சாமுவேல்அவர்கள் மூன்றாஞ்சபையிற் சேர்வதால் அடையக்கூடிய பலன்களையும், நன்மைகளையும் எடுத்துக்காட்டினர். ஈற்றிலே சபைக்கர்த்தர் அதிவண. என். யோசேப் சுவாமியவர்கள் சபையின்விருத்தியைப் பாராட்டி அனைவர்க்கும் நன்றித்துதிகூறியதோடு விழா இனிதே நிறைவாயிற்று. விழா நடைபெற்ற தினங்களிலே ஆசனக்கோவிலும், அதன்சூழ்நிலையும் அர்ச். பிரான்சீஸ்குவின் அசீசிப்பதிமயமாகவே காட்சியளிக்கலாயிற்று.

## சம்பத்திரிசியார் கல்லூரித் தலைவரின் வேண்டுகோள்

அன்புக்கும், வணக்கத்துக்குமுரிய விசாரணைப் பங்குக் குருப்பிரசாதிகட்கு:

இதற்குமுன் இருந்ததிலும் இப்பொழுது கூடுதலானபிள்ளைகள் படிக்கக்கூடியவசதிகள் நமது கல்லூரியில் ஏற்பட்டிருக்கின்றன. கல்வியில்விருப்புள்ள ஒவ்வோர்மாணவனும் வாழ்வில் முன்னேற இடம்கொடுக்க வேண்டுமென்பதே நமதுஆசையாகும்.

இதுவிஷயமாய் இரண்டு விஷயங்களை வற்புறுத்த விரும்புகிறோம்.

1. விண்ணப்பஞ்செய்யும் அனைவருக்கும் இடவசதிஇருக்கமாட்டாது.

2. ஆனால், படிப்பில்ஆர்வமுள்ள ஒவ்வோர் பிள்ளைக்கும் வசதிசெய்ய வேண்டுமென்றே தீர்மானித்திருக்கிறோம்.

3. விசேஷபுள்ளிகள்பெறும் தகுதிவாய்ந்த மாணவருக்கெனச் சிலஉபகாரச்சம்பள வசதிகளுமுண்டு

ஆகவே, அடுத்துவரும் கார்த்திகை மாதம் 1-ந் திகதி சனிக்கிழமைகாலை 9 மணிக்கு நமதுகல்லூரிமண்டபத்தில் ஓர்தெரிவுப்பரீட்சை நடத்தவிருக்கிறோம். கடைசிவேளையிலே நெருக்கடிப்படாமல் தக்கவசதிகளை ஏற்கனவேசெய்வதற்காக இப்பரீட்சையை நேரகாலத்தோடு நடத்துகிறோம்.

இவ்விஷயத்தைப் பெற்றோருக்குப் பிரசங்கவேளையில் வற்புறுத்திக்கூறும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். பிள்ளைகளுக்குச் சிறந்தவழியைத் திறந்துவைப்பதே எங்கள்நோக்கமாகும். பெற்றோர் தங்கள்பிள்ளைகளைக் கார்த்திகைமாதம் 1-ந்திகதி சனிக்கிழமை காலை தெரிவுப்பரீட்சைக்கு அனுப்பிவைக்கும்படி வேண்டுகின்றோம். இப்பரீட்சையைவிடக் கல்லூரியில்சேர்ந்து கொள்ளுவதற்கு வேறுபரீட்சை 1953-மஆண்டில் நடைபெறமாட்டாது. 1953-ம்ஆண்டு தைமாதம் வரையில்பெற்றோர் காத்திருப்பார்களாயின் அவர்களுடைய பிள்ளைகள் நமது கல்லூரியில் சேர்ந்துகொள்ள இடம்பெறமாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

தங்கள் நன்றியும்நேசமுமுள்ள
T. M. F. லோங் சுவாமியார்
கல்லூரித்தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிஷன் ஞாயிறு நிருபம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காரம் இல்லாதபோதிலும், உபத்திரவும் இல்லாமலிருந்தால் போதும். எத்தனையோ மேற்றிராசனங்களில் கத்தோலிக்கர் என்று பேர் வைத்துக்கொண்டு திருச்சபைக்குக் கீழ்ப்படியாமல், ஞாயிற்றுக்கிழமைப் பூசைக்குப் போகாமல், வருடத்துக்கு ஒரு முறையாகிலும் பாவசங்கீர்த்தனம்செய்து திவ்வியநன்மை வாங்காமல் தாறுமாறாகச்சீவித்துச் சத்திய திருச்சபைக்குப் பெருந் தீங்கிழைக்கிறார்கள். இது மாத்திரமல்ல. சிற்சில ஊர்களில சத்தியமறையை மறுதலித்து, இந்துக்களாகவோ, துலுக்கர்களாகவோ, புறொட்டஸ்தாந்தர்களாகவோ மதமாற்றம் செய்திருக்கிறார்கள். இப்படி மதம்மாறினவர்கள் கத்தோலிக்கவேதம் பொய்யானவேதம் என்று ஆராய்ந்து போனவர்கள் அல்ல. ஊரில்நடந்த குழப்பத்தினால் மதம்மாறினவர்கள். கத்தோலிக்க வேதத்தில் கண்டிப்பான கட்டுப்பாடு இருக்கிறது. இஷ்டம்போல் சொந்த மனைவியைத் தள்ளிப் போட்டு வேறொருத்தியைக் கட்டிக்கொள்ள உத்தரவு கிடையாது. ஏனையமதங்களில் அநேகமாய் இந்தக்கட்டுப்பாடு கிடையாது. இதனால்தான் விசுவாசமற்ற கத்தோலிக்கர் வேதத்தை மறுதலிக்கிறார்கள்.

ஆகவே, அன்பார்ந்தபிள்ளைகளே! நமது செல்வத்தேசம் மனந்திரும்ப வேண்டுமானால் முதன்முதல் கத்தோலிக்கரின் சீவியம் புனிதமானசீவியமாய் இருக்கவேண்டும். உலகவாசிகள் செய்யக்கூடிய வாய்ச்சாலகமான பிரசங்கம் அவர்களுடையமுன்மாதிரிகையே. கிறீஸ்தவன் இன்னொருகிறீஸ்துநாதராயிருக்கப் பிரயாசப்பட வேண்டுமென்பதை மறக்கவேண்டாம். கத்தோலிக்கர் அனைவரும் கத்தோலிக்கசேவாசங்க வீரர்கள். பரிசுத்த பாப்பரசரோடும், மேற்றிராணி ஆண்டவரோடும், பங்குக் குருமாரோடும் ஆத்தும இரட்சணிய அலுவலில் ஈடுபட்டு உழைக்கவேண்டியவர்கள். இங்ஙனம் நடப்பார்களேயானால் நமது சத்தியமறை எங்கும் செழித்தோங்கும் என்பதற்கு எட்டுணையும் சந்தேகமில்லை.

சேபம்: கேளுங்கள் கொடுக்கப்படும்; தட்டுங்கள் திறக்கப்படும்; தேடுங்கள் கண்டடைவீர்களென்று சத்திய சுரூபியான இரட்சகர்சொன்ன அமிர்த மொழிகளை நினைவுகூர்ந்து நமது தாய்நாடு மனந்திரும்புவதற்காக உருக்கமாய்ச் செபிக்கவேண்டியது நம்ஒவ்வொருவர்பேரிலும் சுமந்தகடன். ஒவ்வொருபங்கிலும், ஒவ்வொரு பாடசாலையிலும் செபஅப்போஸ்தலசபை ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்பது நமதுஉருக்கமான விருப்பம். இற்றையத்தினம் கத்தோலிக்கஉலகமெங்கும் தலைசிறந்து விளங்கும்பக்தி, செபமாலைப் பக்தி. அதுவும் குடும்பசெபமாலைப்பக்தி. நமது மேற்றிராசனத்தில்உள்ள ஒவ்வொருகுடும்பத்திலும் குடும்பசெபமாலை செபிக்குமாறு வண. பங்குக்குருமாரும், கன்னியர்களும், ஆசிரியர்களும் முயற்சிசெய்வார்களாக. செபமாலை, செயமாலை. இக்காலத்தில் சத்தியதிருச்சபையை அழிக்கக் கங்கணங்கட்டியிருக்கின்ற சத்துராதிகள் அனந்தம்பேர். இவர்களையெல்லாம் முறியடிப்பதற்கு நாம் உபயோகிக்கவேண்டிய எத்தனம் செபமாலை.

**தானதர்மம்:** மிஷன் நாடுகளுக்கு வருடந்தோறும் விசுவாசப்பரப்புதல் சபையிலிருந்து அந்தந்த மேற்றிராசனங்களின் அந்தஸ்துக்கும், தேவைக்கும் ஏற்றாப்போல உதவிகிடைக்கிறது. இந்தப் பேருதவி இல்லாதே போனால் இந்தியாவிலுள்ள மேற்றிராசனங்கள் இப்போது செய்துவருகிற நன்மைகளைச் செய்வதுகூடாதகாரியம். நன்றி மறப்பது நன்றன்று. ஆகையால், நமதுநன்றியைக் காண்பிக்கும் பொருட்டுக் கூடுமானவர்கள்எல்லோரும் விசுவாசப்பரப்புதல்சபையில் சேரவேண்டும். இதுகடினமல்ல. மாதத்திற்கு இரண்டுஅணா. வருடத்திற்குரூபா 1—8—0.

மிஷன் ஞாயிற்றுக்கிழமையில் நமது மேற்றிராசனத்திலுள்ள ஏறக்குறைய எல்லாப் பங்குக் குருமாரும் வீடுவீடாய்ச்சென்று யேசுஇராசாவின் பேரால் தர்மம்கேட்பார்கள். வண. பங்குக் குருவானவருக்குக்கத்தோலிக்க சேவாசங்கத்தார் பக்கத்துப்பலமாய் இருக்கவேண்டும். சென்ற வருடத்தைப்போல இந்தவருடமும் முகங்கோணமல் முகமலர்ச்சியுடனும், அகமகிழ்ச்சியுடனும் தாராளமாய்த் தர்மம்செய்வீர்களென்று எதிர்பார்க்கிறோம்.

**தேவ அழைத்தல்:** அறுப்பு மிகுதி, வேலையாட்கள்சொற்பம். இந்தியாவில் மொத்தம்குருமார் தொகை3,818. இவர்களுள்சுதேசிகள்தொகை 2,795. பிறநாட்டினர்தொகை 1023. இந்தியாவை மனந்திருப்புவதற்கு இன்னும் பல்லாயிரம் பரிசுத்தகுருமார் தேவை. தேவகிருபையினால் வரவரத் தேவஅழைத்தல் அதிகரித்து வருகிறதென அறிந்து ஆண்டவருக்கு நன்றியறிந்த தோத்திரம் புரிகிறோம். தாய் தந்தையர்களே! உங்கள்பிள்ளைகள் குருவாகவோ, சந்நியாசியாகவோ, கன்னியர்களாகவோ ஆசைப்பட்டால் தடைசெய்யாதேயுங்கள். தடைசெய்வீர்களேயாகில் தேவ ஆசீர்வாதம் இருக்கமாட்டாது. அநுபவத்தில் அறியக்கிடக்கிறது என்னவென்றால், தடைசெய்த பெற்றோரும், அவர்களின்பிள்ளைகளும் துன்பத்துக்குஉள்ளாகிறார்கள். இதற்கு மாறாகத் தங்கள்பிள்ளைகளைப் பலியாகஒப்புக்கொடுக்கும் பெற்றோர் பாக்கியவான்கள். அவர்களுக்குக்கிடைக்கும் இகபரநன்மைகள் [illegible] தரமன்று.

## எழுத்தாளர்க்கு விளம்பரம்

கத்தோலிக்குக் கதைநூல்களின் (Novels) தொகையைப் பெருக்கும்பொருட்டுத் தூத்துக்குடித் தமிழ் இலக்கியக்கழகம் இருபரிசுகள் வழங்கத் திட்டம்வகுத்துள்ளது.

முதல்நூலாக (Original work) எழுதப்படும் கதைநூலுக்கு ஐந்நூறு ரூபாவும், வழிநூலாக மொழிபெயர்த்தோ, தழுவியோ எழுதப்படும் நூலுக்கு முந்நூறு ரூபாவும் கொடுக்கப்படும்.

கையெழுத்துப் பிரதிகளை அனுப்பும் எழுத்தாளர் பின்வரும் நிபந்தனைகளை அனுசரித்தல் வேண்டும்.

க) தமிழ் இலக்கியக் கழகச் செயலாளருக்கு எழுத்துச்சுவடிகளை 1953-ம் ஆ ஏப்ரல்-திங்கள் 15-ம் நாளுக்குமுன் அனுப்புதல் வேண்டும்.

உ) சுவடிகளை முழுப்பக்க அளவில் (Foolscap) குறைந்தது 400 பக்கம் அடங்கியதாகவும், ஒவ்வொருபக்கமும் குறைந்தது 25 வரிகள் கொண்டதாகவும் இருத்தல்வேண்டும்.

ந) கதைநூல்கள் கருகினல்நியூமன், வைஸ்மன், குரோனின் போன்றவர்கள் ஐரோப்பிய மொழிகளில் எழுதிய நூல்களைப் போல், கத்தோலிக்கு வாழ்க்கையையும், கொள்கையையும் நிலைக்களமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

ச) பரிசுகள் பெறும் நூல்களின் எல்லாஉரிமைகளும் தமிழ் இலக்கியக் கழகத்துக்கு உரியன. அனுப்பப்பெறும் சுவடிகளில் பரிசுபெறாத வேறு உயர்ந்த எழுத்துச் சுவடிகள் இருந்தால் அவற்றையும் தமிழ்இலக்கியக் கழகம் அச்சிட முன்வரும்.

கோவையில் 1953-ம் ஆ மே-திங்கள் நிகழ இருக்கும் இரண்டாவது கத்தோலிக்குத் தமிழ் எழுத்தாளர் பேரவையில் இப்பரிசுகள் வழங்கப்படும்.

## திருமண வெள்ளியூபிலி

நம்பட்டணவாசர்களான ஸ்ரீயேம்ஸ் கிறிஸ்ரியன்தம்பதிகள் தங்கள் திருமண 25-ம்வருட வெள்ளியூபிலிவிழாவைச் சென்ற 10-ந்திகதி வெள்ளிக்கிழமை அமைதியாகக் கொண்டாடினார்கள். அன்றுகாலை யூபிலிநாயகர்கள் பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலிலே தமது சுற்றத்தவர்கள்பலர்சமேதராய்க் கட்டளைக்குரவர் வண. பி. ரி. ஜேம்ஸ் சுவாமியவர்கள் நிறைவேற்றிய யூபிலித்தோத்திர பூசைகண்டு திருவிருந்தருந்தித் தங்கள் திருமண வெள்ளியூபிலி விழாவைக் காணவைத்த சர்வேசுரனுக்குத் தோத்திரம்புரிந்து, அதன்மேல் மேற்றிராணியாண்டவரையும், குருமார்பலரையும்சந்தித்துச் சோபனவாழ்த்தும், ஆசியும் பெற்றுக்கொண்டார்கள். அன்றுபிற்பகல் 5 மணி முதல் மாட்டீன்றோட்டிலுள்ள யூபிலிவிழாநாயகர்களின் இல்லத்திலே ஓர் வரவேற்புஉபசாரம் அமைதியாக நடைபெறலாயிற்று. நம்மேற்றிராணியாண்டவரும், விக்கார்ஜெனறல் சுவாமியாரும், வண. ஜே. எவ். சேவியர், வண. எம். எஸ். நலலையா முதலாம் குருப்பிரசாதிகளும், சுற்றத்தவரும், மற்றும்அன்பர்களும் சமூகமாகச் சிற்றுண்டிஉபசாரனை சிறப்பாக நடந்தேறியது. அத்தருணம் வண. எம். எஸ். நல்லையா சுவாமியவர்கள் விழாத்தம்பதிகளின் இல்லத்திலே திருஇருதய இராசாங்கஸ்தாபகத்தைப் புதுப்பிக்கும் திருச்சடங்கை நிறைவேற்றினார். அதன்மேல் யாவரும் அவர்களுக்குத் தங்கள் சோபனவாழ்த்துகளைச் சமர்ப்பித்தனர். இந்தவேளையூபிலிநாயகியை அறிமுகப்படுத்துவது நலமாகுமென நம்புகிறோம். இவர் யாழ்ப்பாணத்திலே தமது கத்தோலிக்க சமயசேவைகளாலும், சனசமூகசேவைகளாலும் பிரஸ்தாபம்பெற்றிருந்தவரான செவாலியர் பிலிப்மோசேஸ், ஜே. பி. அவர்களின் ஏகபுதல்வியான ஸ்ரீமதி மேரிமாகிறேற் நேசராணியே. இவரும் தமது அருமைத்தங்தையாரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றியாழ்ப்பாணத்திலே மரியாயின் சேனைக் கியூறியாத் தலைவியாகஇருந்து அல்லும்பகலும் அயாது ஆற்றிவருகின்ற சமயசேவையும், சமூகசேவையும் பாராட்டத்தக்கனவாகும். யூபிலிநாயகர்களுக்கு நமது சோபனமும் உரித்தாகுக! இவர்கள் பல்லாண்டு வாழ்க!

Attendance Register
## தினவரவு இடாப்பு

புதுமுறையாய் வேண்டிய சகலவிபரங்களுடனும் அச்சிடப்பெற்று விற்பனைக்குத் தயாராயிருக்கிறது.

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர்
அச்சியந்திரசாலை,
யாழ்ப்பாணம்.

## மரணசங்கதி

நம்பட்டணவாசரும், நெடுங்காலம் பிரபல குருப்பிரசாதிகளினதும், கடைசியாக மகாவந. புறோ ஆண்டவரினதும் சிஷ்யப்பிள்ளையாயிருந்து பலராலும் நன்கறியப்பெற்றவருமான திரு. வே. கிறிஸ்தோப்பர்அவர்கள் விருத்தாப்பிய நோய் கண்டிருந்து சென்ற 5-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை காலஞ்சென்றதுயர செய்தியறிந்து மனவருத்தமுற்றோம். மரிக்கும்போது இவருக்கு வயசு 73. இவர் அல்லைப்பிட்டியிலே ஓர் சைவ வேளாள குடும்பத்தைச்சேர்ந்தவர். தேவபக்தியிற் சிறந்தவர். தினமும் திவ்விய பூசைகண்டும், அடிக்கடி கோவில்சந்தித்தும், நெடுநேரம் செபமாலைசொல்லியும், நல்வாசினையைக் கருத்தாக வாசித்தும் உத்தமசீவியம் நடத்திவந்தார். இவர்சிஷ்யப்பிள்ளையாயிருந்து நெடுங்காலமாகச் சேகரித்து வைத்திருந்து யாழ்ப்பாணம், சென்வின்சென்ற் டீபோல்சபை, அர்ச். சூசையப்பர்பந்திக்கு வெகுமானித்திருந்த பெருந்தொகையான கத்தோலிக்க தமிழ்ப்புத்தகங்களும், மற்றும் சன்மார்க்கத்துக்குரிய புத்தகங்களும் இற்றைக்கும் அதன்புத்தகசாலையை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன. இவருடைய பிரேதசேமம் மறுநாட்காலை திரளான இனசனர், சிநேகிதர் கூடியசமூகத்திலே அடைக்கலமாதாகோவில் கட்டளைக்குரவர் வண. வில்லியம் யேசுதாசன் சுவாமியவர்கள் துக்கசங்கீதம்பாடிக் கடைசி ஆசீர்வாதம் கூறிநிற்கச் சிறப்பாகநடந்தேறியது.

**R. I. P.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

## மேற்றிராணியாண்டவரின் திருமுகம்

கிறீஸ்துவில் நமக்கு மிகவும் பிரியமான பிள்ளைகளே!

செபமாலை வணக்கமாதமாகிய இந்த ஐப்பசி மாதத்தில் உலகம் எங்குமுள்ள கிறீஸ்தவர்கள் செபமாலையை அனுதினமும் செபித்து வருகிறார்கள். நீங்களும் இந்தப் பத்தியை ஒவ்வொரு நாளும் அனுசரித்து வாருங்கள்.

திருச்சபை பல இடங்களிலும் துன்புறுத்தப் படுகிறது. கிறீஸ்தவர்கள் அனுபவிக்கும் துன்பங்களுக்குக் கணக்கில்லை. துன்பங்களை அனுபவிக்கிற அந்த நமதுசகோதரர் விசுவாசத்தில் தளம்பாமல் உறுதியாய் இருக்கவும், பிரமாணிக்கம் காண்பிக்கவும் கூடிய தைரியத்தைச் சருவேசுரன் அவர்களுக்குக் கொடுக்கும்படி மன்றாடுங்கள்.

எமது மேற்றிராசனத்தில் உள்ள சகல கத்தோலிக்க குடும்பங்களிலும் குடும்ப செபமாலைப் பத்தி பரவும்படி மன்றாடுங்கள். எங்கள் குடும்பங்கள் சீராய், கத்தோலிக்க ஒழுக்க முள்ளவைகளாய், ஒற்றுமையாய் வாழுவதற்கு இந்தப் பத்திமுயற்சி ஓர்உத்தம வழியாகும். இந்தப் பத்தியை அனுசரித்தால் சமுசாரிகள் ஒரு மனம் உள்ளவர்களாய் இருப்பார்கள்; தங்கள் பிள்ளைகளை நல்லொழுக்கத்தில் வளர்த்து வருவார்கள்; நல்ல முன்மாதிரி காண்பிப்பார்கள்.

இப்படிப்பட்ட குடும்பத்தில் தேவநேசம், பிறர்சிநேகம், விசுவாசம், சமாதானம் முதலிய புண்ணியங்கள் விளங்கும். அவர்கள் தேவ சித்தத்திற்கு எப்போதும் பணிந்தவர்களாய் இருப்பார்கள். இப்படிப்பட்ட இல்லம் அர்ச்சியசிட்டர்களைப் பயிற்றும் பாடசாலையாய் விளங்கும்.

மேலும், அடுத்த கிழமை விசுவாசப் பரப்புதல் ஞாயிறு என்பதை நீங்கள் அறிவீர்கள். உலகிலுள்ள பிறசமயத்தவர்களை மனந்திருப்புவது ஒவ்வொரு கிறீஸ்தவனுக்கும் கடமை தன்னுடைய செபத்தினாலும், முன்மாதிரியினாலும், ஒறுத்தலினாலும் இக்கடமையை நிறைவேற்ற வேண்டியது. விசேஷமாய் நமதுநாடு மனந்திரும்ப வேண்டும். அதற்கு இடையூறுகள் பல. அவைகள் நீங்கி நம்தேசத்தவர் தேவதாயார்மூலம் யேசுநாதருடைய அரசாட்சியில் வந்து சேர வேணுமென்று இம்மாதத்தில் மிகவும் உருக்கமாய் மன்றாடுங்கள்.

கிறீஸ்துநாதர் தமது வரப்பிரசாதங்களைத் தமது மாதாவின் வழியாய் உங்களுக்குத் தந்தருள வேணுமென்று விரும்பி உங்களை ஆசீர்வதிக்கிறோம்.

✠ ஜே. எமிலியானுஸ் பிள்ளை, O. M. I.



## பச்சைக்கிளி

1. வண்ணப் பச்சைக் கிளியம்மா!
 வளைந்து சிவந்த மூக்கம்மா!
 தின்னக் கனிகள் தந்திடுவேன்
 திரும்பி என்னைப் பாரம்மா!
2. வட்ட வட்டக் கண்ணம்மா!
 வாராய்! இங்கே கண்ணம்மா
 கட்டிப் பாலுந் தந்திடுவேன்
 கனிவாய்ப் பாட்டுப் பாடம்மா
3. சோலைக் காட்டுப் பொன்னம்மா!
 சொன்னது சொல்லுஞ் சொர்ணம்மா!
 கோவைப் பழமுந் தந்திடுவேன்
 கொத்திக் கொத்தித் தின்னம்மா

## பயம்

"பயம் என்பது ஒருபேய்"
"பயம் ஆயுளைக் குறைக்கும்"
"பயந்தவன் கிழத்தன்மையைச் சீக்கிரமடைகிறான்"
"பயமும் சுதந்திரமும் பகைவர்கள்"
"பயமும் சந்தோஷமும் ஓர்வீட்டில் நில்லா"
"பயம மனிதனை அடிமையாக்குகின்றது"
"பயம் முயற்சியைக் கெடுக்கும்"
"பயம் கவலையின் மூலபிதா"
"பயத்தினாலேயே பற்பலவியாதிகள் உண்டுபண்ணப்படுகின்றன"
"தீமைக்குப் பயந்துநட"

"ஜெயம்"

## அர்ச். பிரான்சீஸ் சவேரியார்

### IV. யாத்திரை

முன்சொன்ன வாக்குத்தத்த நாளின்பின் இரு வருடங்கள் சென்றதும் சேவியரும, அவருடைய கூட்டத்தவரும் தாங்கள வாக்குப்பண்ணிய யாத்திரையைத் தொடங்கினார்கள். அவர்களுடன் வேறு இருவரும் சேர்ந்திருந்தார்கள். இஞ்ஞாசியார் அவர்களை வெனிஸ் நகரத்தில் காத்திருந்தார் ஏனெனில், பரிசுத்த ஸ்தலங்களுக்குச் செல்வதற்கு அதுவே கப்பலேறும் துறைமுகம்.

யேசுசபையைச்சேர்ந்த இந்த ஒன்பது பேர்களும் பரீஸ் பட்டணத்திலிருந்து வெனிசுக்குக் கால்நடையாகப் புறப்பட்டனர். பரீஸ் கலாசாலை மாணவர்போல் உடுத்திருந்தனர். ஆயினும் அவர்களுடைய சட்டைச் சாக்கில் வேதாகம விவிலியமும், மந்திர மாலையும் அல்லாமல் வேறொன்றும் இருக்கவில்லை. கழுத்தில் செபமாலை அணிந்திருந்தார்கள். போகும்வழியில் ஜேர்மனி, சுவிச்சர்லாந்து தேசங்களூடாகச் சென்றார்கள். இத்தேசங்களிலுள்ள அநேகர், மெய்வேதத்தைக் கைவிட்டு, நற்கருணையையும், தேவதாயையும், திருச்சபையையும் நிந்தித்துத் தூஷணித்து வந்தார்கள். ஆகையால், நமது யாத்திரிகள் யேசுநாதர், கன்னிமரியம்மாள் பேரில் தங்களுக்குள்ள விசவாசத்தை வெளிப்படுத்தித் திருச்சபையின் மட்டிலுள்ள அபிமானத்தையும் அறிவிக்க விரும்பினார்கள்.

இவர்கள் ஏழுநெடுங் கிழமைகளாகப் பயணஞ் செய்தனர். அவர்கள் நடந்துபோன பல இடங்களில் யுத்தத்தின்—அழிவின் அடையாளங்கள் பல கண்டார்கள். பாதைகளில் பனக்கட்டி நிரம்பி இருந்தது. எத்தனையோ கரடுமுரடும், செங்குத்தானவையுமான மலைகள், குன்றுகளைத் தாண்ட வேண்டி இருந்தது. ஆயினும், ஆனந்தம் பொங்கியவர்களாய் வழியில் உள்ள அபாயங்கள், துன்பங்களை ஒருபொருட்டாய் எண்ணாமல் சென்றார்கள். ஏனெனில், திருஇரட்சகரின் அடிச்சுவடுகளை அவர்கள் பின்பற்றுகிறார்கள் அல்லவா?

அவர்கள் வெனிஸ்நகரத்தை அடைந்ததும், அங்கு அந்நகரத்தாருக்கும் துருக்கருக்கும் இடையில் போர் தொடங்கியது. ஒருவருடமளவாய்ப் பலஸ்தீனநாட்டிற்குக் கப்பல்கள் புறப்படவில்லை. ஆனதினால் இஞ்ஞாசியார் தலைமையில் யாத்திரிகள் றோமைக்குச் சென்று, ஆத்தும இரட்சணிய அலுவலாகிய முக்கிய அலுவலில் ஈடுபட ஆயத்தமாய்த் தங்களைத் திருச்சபைத் தலைவரிடம் ஒப்படைத்தார்கள்.

### கவர்னர்—ஜெனறலின் சுகவீனம்

கவர்னர்–ஜெனறல் சோல்பறிபிரபு ஈரல்பித்தாசயநோய்கண்டு வருந்துவதாக இராணிமாளிகையிலிருந்து சென்ற 11-ந்திகதி அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதனால் அவர் இம்மாதம் 30-ந்திகதிவரை தமது கடமைகளை நிறுத்தியுள்ளார். ஆயினும் அவரது நிலைமையில் ஏவ்விதகவலையுங்கொள்ள இடமில்லை.

## சுதேச வர்த்தமானம்

### குருமார் ஞானவொடுக்கம்

யாழ்ப்பாண மேற்றிராசனத்தைச் சேர்ந்த வண. குருப்பிரசாதிகளின் மூன்றாவதுபிரிவான ஞானவொடுக்கம் இம்மாதம் 20-ந்திகதியாகிய வருகிற திங்கட்கிழமை பிற்பகல் ஆரம்பமாகி அடுத்த 27-ந்திகதி திங்கட்கிழமை காலை முடிவாகும். தென்னிந்தியாவிலே கார்மேல்சபையைச் சேர்ந்த வண. மார்செல் சுவாமியவர்கள் ஞானவொடுக்க போதகஞ் செய்யவிருக்கின்றார்.

### யாழ்ப்பாணமும் சுவபாஷைகளும்

யாழ்ப்பாணக் கச்சேரியும், யாழ்ப்பாணப் பெரும்பிரிவிலுள்ள காரியாதிகளின் சகலகாரியாலயங்களும் இம்மாதம் 1-ந்திகதி தொடக்கம் தேசிய பாஷைகளைப் பாவனைக்குக்கொண்டு வந்திருக்கின்றன. இந்தக்காரியாலயங்களில் கிடைக்கும் கடிதங்களுக்கெல்லாம் அவற்றிலே கையொப்பம் இடப்பட்டிருக்கும் பாஷையிலே பதில்கள் அனுப்பிவைக்கப் படுகின்றன. கிடைக்கும் கடிதத்தில் பெருவிரல் அடையாளம் இருந்தால் அக்கடிதம் அனுப்புகிறவர்சேர்ந்த சமூகத்தின் பாஷையிலே பதில் அனுப்பப்படுகிறது.

### புதிய பாத்திமாநாயகி சுரூபம்

ஸ்பெயினைச் சேர்ந்த மலாக்காவிலுள்ள பரிசுத்த வெற்றிநாயகியின் கல்லூரிமாணவர்கள் வெண்ணப்புவாவிலுள்ள யோசேவாஸ் கல்லூரிக்குப் பாத்திமாநாயகியின் திருச்சுரூபம் ஒன்றை அன்பளிப்புச் செய்திருக்கின்றனர். இது அக்கல்லூரிப் புதியசிற்றாலயத்தில் ஸ்தாபிக்கப்படவிருக்கின்றது. புதியசிற்றாலயத்திற்குச் சென்ற 13-ந்திகதி திங்கட்கிழமை கண்டிமேற்றிராணியாராகிய மகாவந். டி. பி. றெஞ்ஞோ ஆண்டவரால் அஸ்திபாரக்கல் நாட்டப்பட்டிருக்கிறது.

### பி. ஈ. எம். கௌரவபட்டம்

தம்பனை, மாசில்லாமாதா கோவிலைச் சேர்ந்தவரும், மலாயாவில் குவாலகிளாங்பட்டின அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிபராய் இருப்பவருமான டக்றர் எஸ். செபமாலை தம்பிமுத்து அவர்கள் மாட்சிமை தங்கிய எலிசபெத் மகாராணியாரால் B. E. M. என்னும் கௌரவப்பட்டம் வழங்கப்பெற்றிருக்கிறார் என்பதைஅறிந்து சந்தோஷமானோம். இவர் தேவதாயாரில் மிகுந்த பக்தியுடையவர். இவ்வூரிலே தாம் இல்லாவிடினும் தம்பனைச்கோவிலில் நடைபெறும் உற்சவங்களில் சிறப்பாகக் கலந்துகொள்ளுகின்றார். கோவில்முகப்பில் அமைந்திருக்கும் வெற்றிமாதாவின் சுரூபம் இவரால் அளிக்கப்பட்டதே. —நிருபர்

### பூநகரிக் கடற்பாதை

மகாதேவா கடற்பாதையென அறியப்படுகின்ற பூநகரிக்கடற்பாதையைத் தென்புறமாக 2,000 அடியால் நீடிக்கச் செய்வதுபற்றி ஆலோசிக்குமாறு யாழ்ப்பாணம், வெட்டுக்காட்டுக் கமக்காரரும், தோட்டமுதலாளிகளும் போக்குவரத்து மந்திரியாருக்குச் சமீபத்திலே ஓர் மனுப்பத்திரம் சமர்ப்பித்திருந்தார்கள். இந்தப்பாதையை நீடிக்கச் செய்யாதவரையிலே ஓர் பெருந்தேசப்பரப்பைக் கமச்செய்கைக்குள்ளாக்கிய மண்ணார்–பூநகரிக் கரையோரத் தெருவும், வண்ணேரிக் குளமும் யாதாமோர்பலனும் தரப்போவதில்லையென அந்தமனுவிலே இவர்கள் தெரிவித்திருந்தார்கள். ஆனால், மந்திரியார் தமது பதிலிலே தற்போதைய பணநிலையையிட்டும், இதிலும் மிகமுக்கியமான அபிவிர்த்திவேலைகளுக்குப் பணம் ஒதுக்கப்பட வேண்டியிருப்பதையிட்டும அவ்வாறு செய்ய முடியாதென அறிவித்திருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளு சங்கதிகள்

—அர்ச். பிரான்சீஸ்சவேரியார் பரலோகபிராப்தியான நான்காம் நூற்றுண்டுவிழாவின் ஞாபகார்த்தமாக நடந்தேறும்கொண்டாட்டங்களையிட்டு, மனந்திரும்பியபல்லாயிரக்கணக்கானபேருக்கு ஞானஸ்நானம் அளிய அவரதுவலதுகரமும், புயமும் இம்மாதம் 22-ந்திகதி போர்த்துக்காலின் தலைப்பட்டணமாகிய லிஸ்பன் நகருக்குக் கொண்டுபோகப்படவிருக்கின்றன.

— பரிசுத்தப்ப்பாசர் இம்மாதம் 1-ந்திகதி இந்தியகுடியரசின் உபஜனாதிபதியான டக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களுக்குக் காஸ்ரெல் காண்டல்போவிலுள்ள தமதுவேனிற்காலமாளிகையில் பேட்டியருளலாயினர். வத்திக்கானுக்கும், சுவிற்சர்லாந்துக்கும் இந்திய ஸ்தானீகராகவிருக்கும திரு. ஆசாவ்ப் அலிஅவர்களுடன் அவர் அங்குசென்றிருந்தார்.

—பரிசுத்தபாப்பாசர் தற்சமையம் வசித்துவரும் காஸ்ரெல்காண்டல்போ மாளிகையிலே, ஆகமனகாலஞான அப்பியாசங்கள் வருகிறகார்த்திகைமாதம் 30-ந்திகதியாகிய ஆகமனகால முதல் ஞாயிற்றுக்கிழமை வத்திக்கானில் ஆரம்பமாகிறவரையிலே தங்கியிருப்பாரெனச் செய்திகிடைத்திருக்கிறது.

— கடலிலும், பனிப்படலத்திலும், தரையிலும இறங்கக்கூடிய நவீனமாதிரியான ஓர்ஆகாயவிமானம் நோர்வேயிலே கட்டப்பட்டிருக்கிறது. இது 9 பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு மணித்தியாலம் 150 மைல் வீதம் பறந்துசெல்லக்கூடியது. சந்தாப்பத்துக்கேற்றவிதமாக இதனை மாற்றி அமைத்துக்கொள்ளலாம்.

—இம்மாதம் 1-ந்திகதி நடைபெற்ற யப்பானிய பொதுத்தேர்தலிலே இதுவரை திரு. யோஷிடா அவர்களைப் பிரதமராகக்கொண்டு ஆட்சிநடத்திவந்த லிபறல்கட்சி தனதுஅபேட்சகர்களையே பெரும்பான்மையினராகக்கொண்டு நிறைந்தவெற்றி பெற்றிருக்கிறது. 107 அபேட்சகர்களைத் தேர்தலுக்கு நிறுத்திய கம்யூனிஸ்தகட்சி ஒருவருமே தெரியப்படாது படுதோல்வியுற்றது.

—காப்பிரிகள தமிஷன்களின் பாதுகாவலரான அர்ச. கிளாவர் இராயப்பரின சீவியவாலாற்றைச் சினிமாப்படமாகத் தயாரிக்க ஸ்பானிய சினிமாக்கம்பெனிஒன்று ஆயத்தப்படுகின்றது. ஸ்பெயினிற்பிறந்த ஓர்யேசுசபைக் குருவானஇவர் மூன்றுலட்சம காப்பிரிஅடிமைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்திருக்கிறார்.

—அப்போஸ்தலரான அர்ச். தோமையார் இந்தியமண்ணில் கால்வைத்த 19-ம நூற்றாண்டு ஞாபகார்த்தமாக எர்ணாக்குளத்தில் வருகிறமார்கழிமாதம நடைபெறவிருக்கும் கொண்டாட்டத்துக்குக் கருதினல் திசறண்ற் ஆண்டவர் சமுகமளிக்க வரும்போது அர்ச். தோமையாரின் வலதுகரத்தின் ஓர்பகுதியையும் இந்தியாவுக்குக் கொண்டுவரவிருக்கின்றார்

—மிக்கேல்அஞ்ஜெலோஎனும் உலகப்பிரசித்திபெற்றசிற்பியின் கடைசியானசிறந்த கைவேலைப்பாடான பேரானபியெற்றா றொண்டாணியின் சுரூபமானது இத்தாலியைவிட்டுவெளியேறாது தடுத்துவைக்கும்நோக்கமாக மிலான்நகரசபை 13 கோடியே 50லட்சம் லீர்நாணயம்விலைகொடுத்து அதனை வாங்கியிருக்கிறது. மிக்கேல்அஞ்ஜெலோ 90 வயசுடையவராயிருந்தபோது இதனைசசெய்துமுடித்தார்.

— செஞ்சீனாவிலே குருமார் ஞானவிசாரணைநடத்தாது தடைசெய்யப்பட்டுள்ள பகுதிகளிலே மரியாயின் சேனையைச்சேர்ந்த சாதாரணகத்தோலிக்கர் திருச்சபையை நனகுபரிபாலித்து வருகிறார்களென்று சீனாவிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ள வண. ஓ. வேர்வில்கென் சுவாமியார் பெல்ஜியதேச லூவெய்ன்நகரில் கூறியிருக்கின்றார்.

## பிரிவோபசார விழா

யாழ்ப்பாணம், அர்ச். ஞானப்பிரகாசியார் கூட்டத்தலைவரான வண. எவ் ஜே. ஸ்ரனிஸ்லாஸ், O. M. I., B. A. சுவாமியவர்கள் மூவிருமாதகாலம் எம்மத்தியிலிருந்து எமதுகூட்டத்திற்குப் புத்துயிர் அளித்துவந்ததன்பயனாக அங்கத்தவர்கள் அகமகிழ்ச்சியடைந்தவர்களாய்இருக்கும்போது அவர்கூட்டத்திலிருந்து பிரிகிறார்என்ற செய்தியைஅறியவந்து தாயைப்பிரியும் சேயைப்போலக் கவலையில் ஆழ்ந்தவர்களாய் அவருக்குச் சென்ற 11-ந் திகதி சனிக்கிழமை ஓர் பிரிவோபசாரவிழா நடாத்தினார்கள். அன்று கூட்டச்சாலை அழகியதுவசங்களாலும், பலவர்ணமலர்களாலும் சிங்காரிக்கப்பட்டிருந்தது. பிற்பகல் 5 மணியளவில் சுவாமியாரை அவர்மனையிலிருந்து பலகுரவர்கள்சமேதராய் அழைத்துவந்து அலங்கரிக்கப்பட்டிருந்த மேடையில் அமரச்செய்ததும் பிரிவோபசாரப்பத்திரம்படித்துத் தெட்சணைவழங்கப்பட்டது. பின்னர் சிற்றுண்டிஉபசரணை இனிதேநடைபெற்றது. அங்கத்தவர்கள்பலர் சுவாமியார்செய்த நன்மைகளைப்பற்றி விரிவாகப்பேசினர். பின்னர் புதியதலைவர்பேசியதும், சுவாமியாரின்நன்றியுரையுடன் விழா இனிதே முடிவெய்தியது.

— ஓர்அங்கத்தவன்

## சென் தெரேசா கழகவிழா

நிகழ்மதி 3-ந் திகதி வெள்ளிவாரம் ஆனைக்கோட்டைமாணவர்களுக்கு ஓர் குதூகலதினம். அன்றுதினம் அன்னை அடைக்கலநாயகியின் ஆலயமும், நாற்புறவீதிகளும், பாடசாலைமைதானமும் பலவர்ணத் துவசங்களாலும், மகரதோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. சென் மேரிஸ்கழகத்தாரினதும், ஆசிரியர்களினதும் ஆதரவுடன் சென்தெரேசா கழகத்தார் தங்கள்கழகப் பாதுகாவற்கன்னிகையின் திருநாளைச்சிறப்பாய்க் கொண்டாடினர். காலை 7 மணிக்கு அர்ச். சூசைமாமுனிவர் அசசியந்திரசாலைஅதிபர் வண. எவ். ஜே. ஸ்ரனிஸ்லாஸ் சுவாமியவர்களால்பாடற்பூசைநிறைவேறியது. ஆசிரியரும், மாணவரும், ஊரவரும் சமுகமளித்துத் திருவிருந்துப் பந்தியிலமர்ந்தனர். திவ்வியபூசை முடிவில் சிறியபுஷ்பத்தின் திருச்சுரூபம் பாடகர்குழாம் இனியகீதங்கள் படிக்க, மாணவிகள்சுமந்தேந்தியவண்ணம் பவனிசென்று ஆலயமஅணமியதும் காணிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. அன்று கழகநிகழ்ச்சியாக மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மதியவிருந் தளிக்கப்பட்டது. மாணவமாணவிகளால் கதம்ப நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு விழாமுடிவுற்றது.

—ஓர்மாணவன்

## ஆயரின் கல்லோயாத் தரிசனை

சென்ற 21-9-52 ஞாயிற்றுக்கிழமை கல்லோயாப்பகுதி முழுவதுக்கும் தனதுசரித்திரத்தில் என்றுமில்லாத ஆனந்ததினமாகும். அன்று திரிகோணமலைமேற்றிராணியார் மகாவந். இக்னேஷஸ் கிளன்னி ஆண்டவர் அவர்கள் சமுகமளித்தமையே அதற்குக் காரணமாகும்.

காலை 7 மணிக்கு அம்பாரைப் பெற்றோல்குதத்துக்கணமையில் நூற்றுக்கணக்கான கத்தோலிக்கமக்களால் வரவேற்கப்பெற்ற ஆண்டவர் அவர்கள் அலங்கரித்திருந்த வீதிவழியே அழைத்துவரப்பட்டுத் திரு. ஜே. எம். எஸ். மிறண்டோ அவர்களின் சாய்ப்பிலே சமயோசிதமாய்அமைத்திருந்த அழகியபீடத்தில் திவ்விய பூசைப்பலி ஒப்புக்கொ[illegible] சரித்திர[illegible] பொன் அட்சரங்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும்.

பூசைமுடிந்ததும் காலை 8-30 மணிக்கு நடைபெற்ற கத்தோலிக்கசங்க ஆரம்பகூட்டத்திற்கு ஆண்டவர்அவர்கள் தலைமைவகித்தார். கத்தோலிக்க சேவைக்கென இங்கினியகலை, வாவின்ன, பறககாக்கல, அம்பாரை, மண்டூர் ஆகியஇடங்கட்குப் பிரதிநிதிகள் தெரியப்பட்டனர். ஆண்டவரவர்கள் தமக்குஅளிக்கப்பட்ட வரவேற்புக்காக நன்றிகூறி, இப்பகுதிமக்கட்கு இன்றியமையாதனவும், இருகண்மணி போன்றனவுமான கோவிலும், பாடசாலையும் இருவநடங்களுள் இங்கு காட்சியளிக்க அனைவோரின் ஒத்துழைப்பையும்வேண்டி, குருமார் அருந்தலானகாலமாயிருந்தாலும் தாம் இப்பகுதிமக்களை விசாரணைசெய்ய ஓர்குருவானவரைத் தருவதாக உறுதிவாக்களித்தனர்.

பின்னர் இப்பகுதியில் நடைபெறும் அபிவிருத்திவேலைகளைப் பார்வையிட்டுப் பாராட்டினர். பிற்பகல் நாலுமணியவில் நடைபெற்ற தேநீர்விருந்துக்குச் சமயபேதமின்றிச் சமுகமளித்த அநேகஉத்தியோகஸ்தரால் விழா மேலும்சிறக்கலாயிற்று.

— நிருபர்

## வியாகுலமாதா திருநாள்

திரிகோணமலை, சின்னக்கடை விசாரணைப்பங்கிலே கோயில்கொண்டிருக்கும் பரிசுத்தவியாகுலமாதா திருநாள் 20-9-52 கட்டளைக்குரவர் வண. T. அறண்ட்ஸ்சுவாமியாரால் கொடி ஏற்றுவைபவத்துடன் ஆரம்பமாயிற்று. 22-9-52 தொடக்கம் வகக்கோட்டை, வண. ஐஸ்ரஸ் சின்னப்புசுவாமியாரால் ஓர்ஞானஒடுக்கம் போதிக்கப்பட்டது. பிரசங்கங்கள் உறங்கிக்கிடந்த பாவிகளின்மனதையுருக்கி மனஸ்தாபக்கண்ணீர் சொரியவைத்தனவெனில் மிகையாகாது. 28-9-52 திருநாட்பூசையுடனும், பின்னேரம்திருச்சுரூபஊர்வலம், திவ்வியநற்கருணை ஆசீர்வர்தம், திருச்சுரூப ஆசீர்வாதத்துடனும் திருநாள் முடிபெய்தியது. வண. ஜோண்பீற்றர், வண. பிளாசிடஸ் டீ சில்வாஎனும் குரவர்களும் திருநாளில்பங்குபற்றினர். பங்குக் கிறீஸ்தவர்களினதும், கட்டளைக்குரவரினதும் சார்பாக ஞானஒடுக்கப்போதகருக்கு ஓர்வாழ்த்துப் பத்திரமும், சிறுதெட்சணையும் அளிக்கப்பட்டன.

S. S. யோசவ்

## மரணசங்கதி

பருத்தித்துறையிலே அர்ச். அந்தோனியார்கோவிலுக்கு அண்மையில் செல்வாக்குள்ள நலல சடும்பத்தில தோன்றியவரும், தேவபத்தியில்சிறந்தவரும், அர்ச். அந்தோனியார்கோவில் மேற்பார்வையாளரின் பாரியாருமான திருமதி அன்னம்மா சிலகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்து 22-9-52 திங்கட்கிழமை பிற்பகல் 2-30மணியளவில் தமதுபத்தா, தாய், சகோதரர் சமுகமாக அந்தியதேவதிரவிய அனுமானங்களைப்பெற்று, ஆண்டவன் திருக்கரங்களில் தமதுஆன்மாவை ஒப்படைத்து மரணத்திரையில் மறையலாயினர். மரிக்கும்போது இவருக்குவயது 43. இவரின்பிரேதமானது மறுநாட்சாயந்தாம பலஇடங்களிலுமிருந்து வந்துகூடிய பெருந்திரளான இனசனர், சிநேகிதர்மத்தியில் வண. கட்டளைச் சுவாமியவர்கள் துக்கசங்கீதம் பாடிச்செல்ல, மாசில்லாமாதா கூட்டப் பெண்மணிகள் செபமாலையோதிவர, அழகியபல்லக்கில், சிறந்தபேழையில் வைத்துச்செல்லப்பெற்றுக்கடைசிஆசீர்வாதத்துடன் பூமதானஞ்செய்யப்பட்டது. இதைக்கண்ணுறும் எல்லோரும் இவரது ஆத்மஇளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

சூ. ஆபேல்.

## JAFFNA KACHCHERI

### Post of Telephone Operator

Applications are invited for the post of Telephone Operator, Jaffna Kachcheri. Applications which should be in the Applicant's handwriting should reach the undersigned not later than 12 noon on 28th October 1952.

2. Applicant should:—
   (a) Be Ceylonese.
      1. A citizen of Ceylon by descent or by registration:
      2. A person who has applied for, or intends to apply for citizen of Ceylon by registration and is deemed by the Minister of Defence and External Affairs to have a *prima facie* entitlement to such citizenship.
   (b) 1. Have passed the J. S. C. (English) examination.
      2. In case of Ex-Servicemen or those in Government employment with good records this qualification may be waived.
   (c) Be fluent in Tamil.
   (d) Be not less than 17 years and not more than 30 years of age.
   (e) Be of good moral character.
3. Salary, Allowances and Condition of Service.
   (a) Rs. 660/- Rs. 42/. Rs. 1164/-
   (b) Rent allowance, cost of living allowance and Special living allowance will be paid according to Government regulations.
   (c) The appointment will be subject to the Public Service Commission Rules, Financial Regulations, Administrative regulations, Departmental Orders and any other rules or regulations which may be issued from time to time by the Government.
   (d) The post is temporary.
   (e) The appointment will be on trial for a period of two years.
4. The selected candidate will be required to pass a medical examination as to his fitness, and if he is found unfit the provisional selection or appointment will be cancelled.

**P. J. Hudson,**
Government Agent, N. P.

The Kachcheri,
Jaffna, 8th October, 1952.

SPECIMEN APPLICATOIN FORM

POST OF TELEPHONE OPERATOR— JAFFNA DISTRICT

1. Full Name.
2. Nationality.
3. Date of birth (to be supported by birth certificate.)
4. Postal Address.
5. Educational Qualifications.
6. Employment since leaving school.
7. Any special claims.

Signature of Applicant.

Date :

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

கொழும்புத்துறைத் தாபனத்தில் கோயில்கொண் டெழுந்தருளி யிருக்கும் அர்ச். சூசைமாமுனிவரிடம் நான் வேண்டிக்கொண்ட அபூர்வமானகாரியம் அற்புதமானவிதமாகக் குறிப்பிட்டநாளிலே கிடைத்தது. நேர்த்திப்படி இதைப் பிரசுரிக்கிறேன். அர்ச். சூசையப்பர்நாமம் புகழப்படுவதாக.

எல். கிறேஷியன்

## நன்றியறிந்த ஸ்தோத்திரம

திருஇருதயநாதரின் இரக்கத்தாலும், பரிசுத்த பாத்திமாநாயகி, அர்ச். சூசையப்பர், அர்ச். செபஸ்தியார், அர்ச். அந்தோனியார், சங. அல்போன்சாசகோதரி, அர்ச். நீத்தம்மாள் இவர்களின் மன்றாட்டாலும் நான்கேட்டகாரியம் அனுகூலமானபடியால் இதை நேர்த்தியின்படி பிரசித்தப்படுத்துகிறேன்.

மட்டக்களப்பு R. M.

## லிசியேபதியில் புதுவேதநாடுகளின் பரிபாலகியின் யூபிலிவிழா

( 3-ம் பக்கத் தொடர்ச்சி)

உமதுவல்லபமிக்க அன்புள்ள பாதுகாவலில் ஸ்ரீலங்காதேசம் கிறீஸ்துநாதரது இரட்சணியப்பலியின் பலன்களைப் பூரணமாக அடைவதாக, ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mal. Eng. No. 21.

## இயற்கையின் கணக்குவழக்கு

சிங்கத்தைப் பழக்குவோன் ஒருவன் நுளம்புக்கடியின் விளைவாய்ச் சமீபத்திலே அமெரிக்காவில் இறந்துபோயினுன். இவ்வாறு பத்திரிகைகள் மூலமாக நாம அறியவராலானேம். என்ன ஓர் அதிசயஉவமை ? தினமும் மிருகங்களின் அரசனுகியசிங்கத்தைத் தனது தொழில்விஷயமாக எதிர்கொண்டுநிற்கின்ற ஓர்மனிதனும், கானகத்தின் இளவரசனது கூரியநகங்களால் கிழிபடவேண்டிய ஆபத்தில் என்றைக்கும் இருந்துவருகிறவனுமாகிய இவன் கடைசியாக அற்பமான ஓர் நுளம்பினுல் கடியுண்டு மரணம்அடைகின்றுன். நுளம்புக்கடியால் மனிதர் இறபபது அருமையல்ல. உதாரணமாக இந்தியாவிலே மலேரியாவைப் பரப்புகின்ற அனேபிலெஸ் எனும்நுளம்பினுல் ஏற்படுகின்ற மரணங்களின்தொகை வருடம்ஒன்றுக்குப் பத்துலட்சம் போராகும். மற்றும்எல்லாவகையான நுளம்புகளினுலும் இறப்போர்தொகை இன்னும்மிக அதிகமாகும்

சாதாரணமாக நுளம்புகள் நோயைக் கொண்டுசென்று பரப்பும்வேலையில் ஈடுபட்டிருக்கின்றன. உதாரணமாக இந்த மலேரியா சம்பந்தப்பட்ட மட்டில் நுளம்புகள் காய்ச்சலைஉண்டுபண்ணுவதுடன் தாங்கள்கடிக்கும் ஆளிடமிருந்து இரத்தத்தையும் உறிஞ்சி எடுத்துக்கொள்ளுகின்றன. இதனைப் பரிகரிக்கச் சிங்கோனுப்பட்டையிலிருந்து தயாரிக்கப்பட்ட குயினைன் எங்கள்வசம் இருக்கின்றது. அதனுல் இந்த இரத்தஉறிஞ்சிகள் கொன்றழிக்கப்படுகின்றன.

இயற்கை இங்கேயும் கருமங்களைக் கணக்குவழக்குப் படுத்துகின்றது. ஒருகையால் எண்ணிறந்தநுளம்புகளையும், இரத்தஉறிஞ்சிகளையும் மனிதர்கள் மேல் செலுத்தும்மலேரியாவால் நம்மை அச்சுறுத்துகின்றது. மறுகையால் குயினைன் என்றமருந்தை நமக்குக்கொடுக்கின்றது. இதனுல் எண்ணிறந்த மன்னுயிர்கள் தப்பிப்பிழைத்திருக்கின்றன.

மலேரியாவைத் தடுக்கும் ஓர்வழிவகையாக முந்திய சர்வதேசசங்கத்தின் மலேரியாக்கம்மிஷன் மலேரியாக்காலம்முழுவதும் தினமும் ஆறு கிறேயினும், மலேரியவைப் பரிகரிப்பதற்காக 5 முதல் 7 நாட்களுக்குத் தினமும் 15 முதல் 20 கிறேயின் குயினைனும் அருந்தவேண்டுமென்று சிபாரிசுபண்ணியிருக்கின்றது. அதன்மேல் இதைப் பாவிக்கவேண்டியதில்லை. மலேரியா மறுதலித்தால் இதேவிதமாகத் திரும்பவும் அருந்திவரவேண்டும்.

## மன்னிப்புக் கோருதல்

எனதுமகள் நான்எதிர்பாராதவிதமாக கன்னிகாஅந்தஸ்தைத் தெரிந்துகொண்டதால் யான் மிக்கமனவருத்தம் கொண்டிருந்தேன். எனதுமனவருத்தம் சிலருக்குத் துன்மாதிரிகையாக இருந்திருக்கக் கூடும்என்றதினுல், இக்குற்றத்துக்காகத் தேவனிடம் மன்னிப்புஇரந்து நிற்கின்றேனென்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

T. K. அமிர்தநாதர்

— யப்பானிலே சென்ற வைகாசி விழாவில் கம்யூனிஸ்தர்கள் நடத்திய கலகத்தின் விளைவாக ருஷியாவுக்குப் பெரும்மகிழ்ச்சியும், உலகில் சமாதானத்தை ஆசிக்கும் நாடுகளுக்குப் பெரும்மனக்கலக்கமும் உண்டாயின. ஆனுல், சமீபத்தில்நிகழ்ந்த யப்பானிய பாராளுமன்றத்தேர்தலிலே கம்யூனிஸ்தர்கள் தங்களுக்கு இருந்துவந்த 22 ஸ்தானங்களையும் ஒருங்கேஇழந்து ருஷியாவைத் திணறவைத்திருக்கிறுர்கள்.

## ORDER NISI

DECLARING WILL PROVED

IN THE DISTRICT COURT OF JAFFNA

1. Joseph T. Thurairatnam and wife
2. Hariet Theresa Mary both of Sirampiady, Jaffna.

Petitioners

Testamentary Jurisdiction } No. 1396

Vs.

1. Francis Rajaratnam Bastiampillai
2. John Bastiampillai of Clock Tower Road, Jaffna.
3. Pius Bastiampillai of Nelliady.
4. James Bastiampillai of Pandianthalvu.
5. Noei Bastiampillai of Martyn Road, Jaffna.
6. Henry Bastiampillai of Kagamma.
7. Francis Bastiampillai of Clock Tower Road, Jaffna.
8. Paul Bastiampillai of do.

Respondents

In the matter of the Estate of the late Mary Rose Bastiampillai widow of Joseph Bastiampillai deceased of Clock Tower Road, Jaffna.

This matter coming on for disposal before William Gunam Spencer Esquire, Additional District Judge, Jaffna, on the 13th day of February 1952 in the presence of Mr. V. Sivasubramaniam, Proctor, on the part of the Petitioners and the affidavit of the Petitioner dated 17th December 1951 having been read :—

It is ordered that the Will of Mary Rose Bastiampillai widow of Joseph Bastiampillai deceased, bearing No. 222 and dated 6th November 1949 and attested by K. Nadarajah, Notary Public be and the same is hereby declared proved unless the respondents or others interested shall on or before the 28th day of March 1952 shew sufficient cause to the satisfaction of this Court to the contrary.

It is further declared that the said Hariet Theresa Mary wife of J. T. Thurairatnam, the 2nd Petitioner is hereby declared the executrix in the absence of the 1st Respondent not applying for probate who is named as executor in the said Will, and that she is hereby entitled to have probate of the same issued to her accordingly unless the respondents or others shall on or before the 28th day of March, 1952 shew sufficient cause to the satisfaction of this Court to the contrary.

This 13th day of February 1952

Sgd. K. D. de SILVA,
District Judge.

Drawn by
Sgd. V. Sivasubramaniam,
Proctor for Petitioners.

28-3-52
Time to shew cause is extended and reissued for 16-5-52.

Sgd. K. D. de Silva.
District Judge.

16-5-52
Time to shew cause is extended and reissued for 14-7-52.

Sgd. K. D. de Silva,
District Judge.

14-7-52
Time to shew cause is extended and reissued for 12-9-52.

Sgd. K. D. de Silva,
District Judge.

12-9 52
Time to shew cause is extended and reissued for 31-10-52.

Sgd. K. D. de Silva.
District Judge.

## ORDER NISI

GRANTING LETTERS OF ADMINISTRATION

IN THE DISTRICT COURT OF JAFFNA

In the matter of the Intestate estate and effects of the late Soosaipillai Chelliah Bastian of Lochnogar Estate. Matale. Deceased

Testamentary Jurisdiction } No. 1500 T.

Francisca widow of S. C. Bastian of No. 10, New Road, Koiyathoddam

Petitioner

Vs.

1. Joseph Emmanuel Bastian of Koiyathoddam presently of "King's Court," Maradana.
2. Mary Theresa Bastian wife of
3. Paulupillai Emmanuel Antony of Koiyathoddam Jaffna.

Respondents

This matter coming on for disposal before William Gunam Spencer Esq., Additional District Judge, Jaffna, on the 2nd day of September 1952 in the presence of Mr. V. Sivasubramaniam, Proctor, on the part of the Petitioner and the affidavit of the abovenamed Petitioner dated 12th July 1952 having been read :

It is declared that the said Petitioner abovenamed as lawful widow of the deceased is entitled to have Letters of Administration and the same be issued to her accordingly unless the Respondents or others shall on or before the 29th day of September 1952 shew sufficient cause to the satisfaction of this Court to the contrary.

This 2nd day of September 1952.

Sgd. K. D. de SILVA,
District Judge, Jaffna.

Drawn by
Sgd. V. Sivasubramaniam,
Proctor for Petitioner.

Time to shew cause extended to 14-11-52.

Sgd. K. D. de Silva.
District Judge, Jaffna.

## யாழ்ப்பாண நகரசபை

பின்னுற்காணப்படும் சந்தைகளிலும், காலையிலும், பஸ்ஸ்ரான்டிலும் வாடகைப்பணம் அறவிடும் உரிமைக் குத்தகைக்கான கேள்விப்பத்திரங்கள்.

பின்னுற்குறிக்கப்படும் சந்தைகளிலும், காலையிலும், பஸ்ஸ்ராண்டிலும் 1953-ம் ஆண்டு தைமாதம் 1-ந் திகதி தொடக்கம் ஒருவருடகாலத்துக்கு வாடகைப்பணம் அறவிடும் உரிமையைக் குத்தகையாகப்பெறுவதற்கான முத்திரையிட்ட கேள்விப்பத்திரங்கள் அனுப்புமாறு யாழ்ப்பாணநகரசபைக் கம்மிஷனர் அழைக்கின்றுர்.

கேள்விப்பத்திரங்கள் நகரசபைக் கந்தோரில் கிடைக்கும் குறித்தமாதிரிப்பத்திரங்களில் கேட்டு அனுப்பப்பட வேண்டும்.

மாதிரிக் கேள்விப்பத்திரங்களை இந்தக்கந்தோரிலே பின்வருமாறு பிணைப்பணங்கட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

(1) கீழேகாணப்படும் 1-ம் 2-ம் குத்தகைகள் ஒவ்வொன்றுக்கும் ரூபா 500.
(2) கீழேகாணப்படும் 3-ம் 4-ம் 5-ம் குத்தகைகள் ஒவ்வொன்றுக்கும் ரூபா 250.
(3) 6-ம் 7-ம் 8-ம் 9-ம் 10-ம் குத்தகைகள் ஒவ்வொன்றுக்கும் ரூபா 50.

மாதிரிக் கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படுமுன் 1, 2, 3, 4, 5-ம் குத்தகைகள்விஷயமாய் முத்திரைச் செலவுக்கும், பிணைஉறுதி எழுதும் நொத்தாரிஸ்செலவுக்குமாக மேலும் ரூபா 150 பிணைப்பணம்கட்டப்பட வேண்டும்.

மாதிரிக் கேள்விப்பத்திரங்கள் 1952-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 25-ந் திகதி சனிக்கிழமைமுற்பகல் 11 மணி வரையும் வழங்கப்படும்.

சகலகேள்விப்பத்திரங்களும் மேல் உறையின் மேற்பக்கமாக இடது கோணத்திலே "சந்தைகளின் குத்தகைக் கேள்விப்பத்திரம்" எனத் தெரிவித்து, யாழ்ப்பாணநகரசபைக் கம்மிஷனருக்கு விலாசமிட்டு, 1952-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 29-ந் திகதி புதன்கிழமைமத்தியானம் 12 மணிக்குப்பிந்தாது இந்தக்கந்தோர்வந்து சேரவேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் அதேநாளிற்றானே (29-10-52) பிற்பகல் 12-30 மணிக்கு இந்தக்கந்தோரில் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் சமுகமாயிருக்குமாறு அழைக்கப்படுகின்றுர்கள்.

ஒவ்வோர் சந்தைக்கும் அல்லது காலைக்கும், பஸ்ஸ்ராண்டுக்கும் வேறுவேறன கேள்விகள் கேட்கப்படவேண்டும்.

சபையால்தெரியப்பட்ட கேள்விக்காரர் அவ்வாறுதெரியப்பட்டு ஐந்து நாளைக்குள் தமதுகுத்தகைக் கேள்வித்தொகையின் மூன்றில்ஒருபங்கைக் கட்டவேண்டியவர். மீதித்தொகை (6, 7, 8, 9, 10-ம் குத்தகைகள்விஷயமாய் முழுக்குத்தகையையும் அடக்கியிருக்கும்படி "குத்தகைகள்" 1952-ம் ஆண்டு மார்கழி 1-ந் திகதியன்று, அல்லது அதற்குமுன் கட்டப்பட வேண்டும்.) 1-ம் 2-ம் 3-ம் 4-ம் 5-ம் குத்தகைகள்விஷயமாய் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் 1952-ம் ஆண்டு மார்கழி 1-ந் திகதிக்குமுன்னதாகத் தாம் முன்னர்கட்டிய ரூபா 150 உடன்சேர்த்து முத்திரைகள் கொடுத்தும், நொத்தாரிஸ்சலாரை இறுத்தும் உண்மையானகாணியை ஈடாகக்கொடுத்து நொத்தாரிஸ்மூலம் பிணைஉறுதி முடித்துக்கொள்ளவேண்டும். மீதித்தொகை எட்டுச்சம பங்குகளாகப்பிரித்து ஒவ்வோர்மாதமும் 15-ந் திகதியன்று அல்லது அதற்குமுன் கட்டப்படவேண்டும். இதிலே முதற்கட்டுப்பணம் குத்தகை நிபந்தனைகளுக்கிணங்க 1953-ம் ஆண்டு தைமாதம் 15-ந் திகதியன்று அல்லது அதற்குமுன் கட்டப்படவேண்டும். குத்தகைநிபந்தனைப் பத்திரங்கள் பார்வையிடுமாறு இந்தக்கந்தோரிலே கிடைக்கும்.

எந்தக்கேள்விக்காரரும் கேட்கப்படுக்தொகையைக்கட்டவும், மேற்கூறியபடி நொத்தாரிஸ்மூலம் பிணைஉறுதிமுடிக்கவும் தவறுமிடத்து, அவரதுபிணைப்பணம் பறிமுதலாக்கப்படும். குத்தகை திரும்பவிற்கப்படும்.

எல்லாக்கேள்விகளையும், அல்லது எந்த ஒருகேள்வியையும் நியாயம்காட்டாமலே தள்ளிவிடச் சபைக்குஉரிமையுண்டு.

வேறுவிபரங்களை இக்கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்.

### சந்தைகள் வருமாறு

1. பெரியகடை காய்கனி மரக்கறிச் சந்தை (இருபிரதான நிரந்தரசந்தைக் கட்டிடங்களும், சபையால்அமைக்கப்பட்ட பலசரக்குக்கடையும், சபையின் அனுமதியோடு ஏற்கனவே அமைக்கப்பட்ட சாலைகளும், தகரக்கொட்டில்களும், தெருவுக்கும் தகரக்கொட்டில்களுக்கும் இடையிலுள்ள வெளியிடமும், அரசாங்க விற்பனைவசதிப்பகுதிக்கென ஒதுக்கப்பட்டுள்ள வெளியிடமும் புறநீங்கலாக)
2. பெரியகடையிலே பஸ் ஸ்ராண்ட் உட்படவுள்ள காலை.
3. பெரியகடை மீன்கடை (அரசாங்கத்தாலே காணி எடுத்துக்கொள்ளப்படுகிறவரையில் பண்ணைத் துறையில் மீன்விற்கும் இடமும்உட்பட)
4. சின்னக்கடை (இறைச்சிக் கடைகள்எல்லாம் புறநீங்கலாக)
5. செங்குந்தர்சந்தை இரண்டு அறைகள்உட்பட. ஆனுல், சபையின் அனுமதியுடன் அமைக்கப்பட்ட தகரக் கொட்டில் புறநீங்கலாக.
6. அரியாலைச்சந்தை (அறைபுறநீங்கலாக)
7. முத்திரைச்சந்தை (ஓடுகடைநீங்கலாக)
8. கொழும்புத்துறைச்சந்தை
9. நாவாந்துறைச்சந்தை
10. பாஷையூர்ச்சந்தை

K. Shanmugam
கம்மிஷனர்
யாழ்ப்பாண நகரசபை

நகரசபைக்கந்தோர்
யாழ்ப்பாணம், 3-10-52.

## அர்ச். மரிய கொறெற்றியின் படம்

இரத்தம் வடித்த லீலி எனப்படும் அர்ச். மரியகொறெற்றியின் அழகான படங்கள் விற்பனைக்கு இருக்கின்றன.

பெரியஅளவு: 12″ × 8½″
ஒன்று 75 சதம்

சிறியஅளவு: 4″ × 2½″
விலை: 100-க்கு ரூபா 7-00

தபாற்கூலி 30 சதம்.

கிடைக்கு மிடம்:

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகர்,
யாழ்ப்பாணம்.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, October 16-1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org